# அனுதின ஆரோக்கியம்

ஜேசுதாஸ் சாமுவேல்

THANKS TO OUR ALMIGHTY GOD. MAY GOD BLESS YOU AND MAY HOLY SPIRIT LEAD YOU

# To the Readers

Dear Beloved Brother/Sister, Thank you for downloading this Ebook. Please note that this Ebook is copyrighted by the author of the book or the publisher of the book or as mentioned in the book. Word of God Ministries is just providing you this ebook as free of cost and it is for your personal use not for commercial purposes.

# To the Copyright Owners

Dear Copyright owners, Word of God Ministries is doing this Free Ebook service to help the people who are not able to find the printed copy of your book from various countries arround the world and to the people who are restricted to have the printed materials in their house. And this will help the readers to improve their spiritual life.

If you want your new books to be published here as Free Ebook, kindly EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489

If you feel that your book should not be published, we are KINDLY REQUESTING YOU TO EMAIL US at wordofgod@wordofgod.in or CALL US at +91 7676505599, +91 9964747708, +91 9964422489. We will remove it from our Free Service as early as possible.

# About Word of God Ministries

**Word of God Ministries** was founded in the year 2007, July 29th with the grace and leading of Almighty God by Bro. Yesudas Solomon as an interdenominational ministry. The popular ministry "**Word of God Team**" is one among our various ministries. Now this ministry has 10 branches such as **1)** Word of God Team, **2)** Mobile Ministry, **3)** Internet Ministry, **4)** Deaf Ministry, **5)** Blind Ministry, **6)** Tribal Ministry, **7)** Computer Ministry, **8)** Audio Ministry, **9)** Video Ministry and **10)** Printing Ministry. We all thank our God with full of our heart for using us in His Great Ministry. We need your continuous prayer support. Our vision is to "Reach the Unreached through Technology". Our websites are: www.WordOfGod.in, www.ChristiansMobile.com, www.FreeChristianEbooks.in, www.IndianBibles.net, www.ChristianAudioBooks.in, www.WordOfGodTeam.com, www.WordOfGodMinistry.in, www.KannadaBible.net, www.KannadaChristian.net, www.PrayForKarnataka.com

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

# அனுதின ஆரோக்கியம்

IMMANUEL GOSPEL LIBRARY
BANGALORE-23
BOOK No. 203/J

# அனுதின
# ஆரோக்கியம்

By

B . ஜேசுதாஸ் சாமுவேல்

பிரசுரிப்பவர்:-
**பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்.**
1408, செக்டர்1, கோல்டன் காலனி,
முகப்பேர், சென்னை - 600 050.

# பொருளடக்கம்


1. தெய்வீக சுகம் என்றால் என்ன? 1
2. சுகத்திற்கான சத்தியமும் உண்மையும் 3
3. சுகமும் ஆத்தும வாழ்வும் 6
4. பரம சுகமும் பரிசுத்த ஆவியானவரும் 8
5. சுகமும் தேவ சித்தமும் 10
6. முதல் சுகம் 12
7. குடும்ப டாக்டர் 14
8. உன்னதமானவரின் மறைவு 16
9. நீதியின் சூரியன் 18
10. சகல வியாதிகள் மேல் அதிகாரம் 21
11. சுகமும் தேவ தூதர் பணியும் 23
12. சுகமும் விசுவாசமும் 25
13. சுகமும் இயற்கைவிதிகளும் 27
14. தெய்வீக சுகமும் தலைமைத்துவமும் 29
15. சுகமும் மன்னிப்பும் 31
16. சுகமும் தவறான உபதேசமும் 33
17. தேவ வார்த்தையும் சுகமும் 36
18. சுகக்கடத்திகள் 38
19. சுகமும் மன்றாட்டு ஜெபமும் 40
20. சுகமும் இயேசு இரத்தமும் 42
21. சுகமும் கர்த்தரின் நாமமும் 44
22. ஆரோக்கியமும் ஆனந்தமும் 46
23. சுகத்தைப் பெறுவது எப்படி? 48
24. உள்ளான சுகம் 50
25. தேசத்தின் சுகம் 52

Copy right © Berachah Prophetic Ministries, Madras

முதல் பதிப்பு - ஜனவரி, 1998

ஆசிரியரது பிற புத்தகங்கள்

ஜெப மேகங்களுக்குள்ளே

அனுதின துதி பலி

அனுதின வாழ்வில தூதர் பணி

அனுதின விசுவாச அறிக்கை

**Revive us O Lord**

**A Book from Berachah Prophetic Ministries**

**அத்தியாயம் 1**

# தெய்வீக சுகம் என்றால் என்ன?

தேவவல்லமை வியாதிப்பட்டிருக்கும் சரீரத்தில் இறங்கி, சத்துருவின் அதிகாரமும் வல்லமையும் அழிக்கப்பட்டு **தேவ வல்லமையும் ஆளுகையும் ஆரோக்கியமும் சரீரத்தை நிரப்புவதுதான் தெய்வீக சுகம். இது முற்றிலும் அற்புதமானது.**

நமது சரீரத்தில் பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் நடக்கும் யுத்தத்தில் பரலோகம் ஜெயிக்கும்போது வெளிப்படுவதுதான் தெய்வீக சுகம். காரணம் **பரலோகம் சுகத்தை உற்பத்தி செய்யும் உற்பத்திஸ்தானம். தொழிற் சாலை. நரகலோகம் வியாதியை அளவில்லாமல் உருவாக்கி அனுப்பும் உற்பத்திஸ்தானம்.**

பரலோகத்தில் வியாதியே இல்லை. அங்கே வேதனையும் இல்லை. பெலனும் ஆரோக்கியமும்தான் பரலோகத்தின் சொத்து. ஆனால் நரகமோ வேதனையாலும் வலியாலும், பற்கடிப்பினாலும், வியாதிகளாலும் நிறைந்தது. பரலோகம் தமது சுகத்தை பூமிக்கு தர ஆயத்தமாயிருக்கிறது. நரகலோகமோ வியாதியையும், வேதனையையும் பூமிக்கு அனுப்பி வியாதியினால் பூமியை நிரப்ப வேகமாக செயல்படுகிறது. இத்தருணத்தில் தேவபிள்ளைகள் தூங்க முடியாது. பக்கத்துவீடு எரியும்போது தூங்குவது கொடூரம்.

பாவம் என்னும் வித்தில் அசுத்தஆவி இணையும்போது பிறக்கும் குழந்தைதான் வியாதி. (வியாதிக்கு பல காரணங்கள் இருக்கலாம். இப்புத்தகத்தின் பதினாறாவது அத்தியாயத்தில் படியுங்கள்) பரிசுத்தம் என்னும் வித்து பரிசுத்த ஆவியானவரின் ஆளுகையில் கலக்கும்போது பிறக்கும் இரட்டைகுழந்தைதான் சுகம் ஆரோக்கியம்.

தாம் செய்த பணியை இன்று தமது மணவாட்டி சபைக்கு இரட்சகர் கையளித்திருக்கிறார். இயேசுவின் நாமத்தில் வியாதி யஸ்தர்மேல் கை வைத்தால் போதும். தேவப்பிள்ளைக்குள் இருக்கிற அணை நீர் போன்ற தெய்வீக சுகம் வெளிப்படும். வியாதிக்காரர் சுகம்பெறுவார்கள். **இந்தப் புத்தகம் அவசர செய்தியாக உங்களிடம் வருகிறது.** இன்று பெரும் கூட்டம் மருத்துவமனைகளில் அவதியுறுகிறது. சொல்லொணா வியாதிகளும், அதனால் வரும் துயரங்களும் ஜனங்களை வாட்டுவதால், டாக்டரிடமே பெரும் கூட்டம் போகிறது. டாக்டரிடம் போகிற கூட்டத்தை தேவன் தம்மிடமும், தம் சபையிடமும் திருப்ப விரும்புகிறார். தேவன் உங்களை சுகமளிக்கும் பாத்திரமாக மாற்ற விரும்புகிறார். உங்களில் வியாதி இருந்தாலும் தேவன் உங்கள் வியாதியையும் இந்தப்புத்தகத்தை படிக்கும் போதே சுகமாக்க விரும்புகிறார். எனவே இந்தப்புத்தகத்தை விசுவாசத்துடன் கருத்தாய் படியுங்கள். சுகத்தை அனுபவியுங்கள். கர்த்தர் செய்த அற்புத சாட்சிகளை எங்களுக்கு எழுதுங்கள்.

இயேசு உலகத்தில் இருக்கும்போது வியாதிப்பட்டவர்களை குணமாக்குவதை தலையாய பணியாக செய்தார். வியாதி யஸ்தர் மேல் மனதுருகினார். அவர் மனதுருக்கம் இன்றும் மாறவே இல்லை.

## அத்தியாயம் 2

# சுகத்திற்கான சத்தியமும் உண்மையும்

**தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனிதனும் பொய்யன் என்று சொல்லக்கடவர்கள்.** (ரோ.3:4)

தேவன் வேதம் மூலம் சொல்லுகிறார். “தழும்புகளால் குணமானீர்கள்” சில வேளைகளில் டாக்டர் வாயோ, அல்லது உங்கள் உணர்வோ சொல்லுகிறது. நோய் சுகமாகவில்லை. இது என்ன வலி! என்னால் தாங்கமுடியவில்லை! ஆம்! டாக்டரும்! உங்கள் உணர்வும் பேசுவது உண்மைதான். (fact தான்) ஆனால் **உணர்வுகள் உங்களை ஆளத் தேவையில்லை. சத்தியமே உங்களை ஆளவேண்டும். சத்தியமே உங்களை வியாதியிலிருந்து விடுவிக்க வல்லமையுள்ளது.**

எனவே தேவனே சத்தியபரர் என்று வாய் திறந்து சொல்லவேண்டும். வேதத்தில் சுகத்துக்கடுத்த வாக்குகளை வாய்திறந்து சொல்ல வேண்டும். வாய்திறந்து, “அவர் தழும்புகளால் குணமாகிவிட்டேன். அவர் ஆலயமாகிய சரீரத்தை ஒருவன் கெடுத்தால், தேவனே அவனைக் கெடுப்பார். (1 கொரி.3:17) என் சரீரத்தை கெடுக்கிற வியாதி தேவனால் கெடுக்கப்படும்” என்று அறிக்கையிட வேண்டும்.

வேதாகம பக்தர்கள் பலர் சத்தியத்தை பற்றிக்கொண்டு சரீரத்தில் வருகிற உண்மை உணர்ச்சிகளை மிதித்து, விசுவாசத்தில் ஜெயம் பெற்றார்கள். ஆபிரகாம் வயது முதிர்ந்தவனானது உண்மை. சாராள் கர்ப்பம் செத்துப் போனதும் உண்மை. ஆனால் திரளான ஜாதிகளை அவன் மூலம் உருவாவது சத்தியமாயிருந்தது. ஆபிரகாம் தேவ

வாக்குத்தத்தங்களைக் குறித்து அவிசுவாசமாய் சந்தேகப் படவில்லை. தான் வயது முதிர்ந்ததையும், சாராள் கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணவில்லை. ஆபிரகாம் விசுவா சத்தில் வல்லவனானான். (ரோ.4:20,21) குழந்தை பெற வாய்ப் பில்லை என்கிற உண்மையை சத்தியத்தால் வென்றார்கள்.

அக்கினியில் நடந்தால் வெந்து போவது உண்மை. ஆனால் அக்கினியில் நடந்திடும்போது வேகமாட்டாய். நான் உன்னோடு இருப்பேன்." என்பது சத்தியம் (ஏசா.,43:2) இந்த சத்தியத்தை அனனியா, அசரியா, மிகாவேல் விசுவா சித்தார்கள். உண்மையிலேயே அக்கினி அவர்களை இரை யாக்கியிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் விசுவாசித்த சத்தியம் அவர்களை வேகாமல் காத்தது. அவர்கள் வேக வில்லை. ஒரு முடியும், உடையும் கருகாது அக்கினியில் இலவச ஏ.சியை ஓசியாக அனுபவித்து வெளிவந்தார்கள்.

ஒரு தேவ பிள்ளை உண்மையான உணர்ச்சியின்படி நடக்க தேவையில்லை. சத்தியத்தின்படியே நடக்க வேண்டும். சூழ்நிலை சொல்லும், "நீ தரித்திரன், பாவி, குறைவுள்ளவன், பெலவீனன், ஞானம் இல்லாதவன், நீதி இல்லாதவன்". நீ பரிசுத்தவான், அவரே உன் பெலன், நீ பெலவான், அவரே உன் ஞானம், நீ ஞானி எனும் வேதவாக்குதான் சத்தியம். அவரே உங்கள் ஐசுவரியம், நீ பணக்காரன். யார் சாட்சியை நீங்கள் நம்பப் போகிறீர்கள். கர்த்தர் சாட்சியையா? அல்லது உங்கள் உணர்வின் சாட்சியையா? உண்மையில் நீங்கள் பலவீனராக, பாவியாக, வியாதிக்காரனாக, தரித்திரனாக இருக்கலாம். ஆனால் சத்தியத்தின்படி அப்படியல்ல.

ஒரு பத்தாயிரம் கடன் உள்ளவனுக்கு ஒரு கோடீஸ்வரன் 10 கோடியை சொத்தாக எழுதி வைத்தால், பத்தாயிரம் கடன் அடைக்கப்படும். தரித்திரன் கோடீஸ்வரனாக மாறுகிறான். அவன் பத்தாயிரம் கடன், பத்தாயிரம் கடன்

என்று கடனை மட்டும் பார்த்தால் அவன் கடன் தீராது. அவன் தன் சொத்தை உரிமை பாராட்டி, அதை தனதாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்குரிய பத்திரத்தைக் கையில் வாங்க வேண்டும். சொத்தைப் பணமாக்க வேண்டும். கடனைத் தீர்த்து, பணக்காரனாக வாழ வேண்டும்.

அது போல சிலுவையில் இரட்சகர் இயேசு தமது சொத்து எல்லாவற்றையும் நமது பேரில் எழுதியிருப்பது சத்தியம். சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலையாக்கும். “எல்லாம் உங்களுடையது” என்கிற சத்தியத்தை அறிவியுங்கள். உங்கள் பரிசுத்தக்குறைவு, ஞானக்குறைவு, சுகக்குறைவு, அன்புக்குறைவு, ஜெபக்குறைவு, வேதத்தியானக்குறைவு, ஊழியக்குறைவு போன்ற எல்லா குறைகளினின்றும் விடுதலை பெற்று நிறைவாவீர்கள்.

## அத்தியாயம் 3

# சுகமும் ஆத்தும வாழ்வும்

**'பிரியமானவனே! உன் ஆத்துமா வாழ்கிறது போல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.' (3 யோ.:2)**

உள்ளான மனுஷன் எவ்வளவு வாழ்கிறானோ, அவ்வளவுதான் வெளி மனுஷனும் வாழ்வான். ஒரு தேவனை ஏற்றுக்கொண்ட பிள்ளைக்குள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய திரியேக தெய்வம் வாழ்கிறார். அவர் உள்ளே வாழும்போது உள்ளான மனுஷனான ஆத்துமா சகல சம்பத்தோடும் ஆசீர்வாதங்களோடும் வாழ்வது சத்தியம். காரணம், ஆவிக்குரிய உன்னதங்களின் சகல ஆசீர்வாதங்களாலும் தேவன் நம்மை ஏற்கெனவே ஆசீர்வதித்து இருக்கிறார். (எபே. 1:3)

நீ ஆத்துமாவிலே வாழவில்லை என்பது பிசாசின் பொய். உள்ளான மனுஷனில் நாம் வாழ்வதை பார்க்காவிட்டால், வெளி மனுஷனில் வாழ முடியாது என்பதை அறிந்த சத்துரு, **உள்ளான மனுஷனில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பதை நம் கண்ணுக்கு மறைத்து, 'உள்ளான மனுஷனில் நீ வாழவில்லை' என்கிறான். இந்த சாத்தானின் பொய்யை நம்பும்போது, நாம் வெளி மனுஷனில் வாழ்ந்து சுகமாய் இருக்க முடியவில்லை.**

ஒரு இராஜா இரவில் கூடாரத்தில் 10 மணிக்கு பிறகு விளக்குகள் எரியக் கூடாது என்று கட்டளை கொடுத்திருந்தாராம். இரவில் ஒரு போர்ச்சேவகனின் கூடாரத்தில் விளக்கு எரிவதைக் கண்டு கோபத்துடன் இராஜா கூடாரத்தை நெருங்கினாராம். கூடாரத்திற்குள் எட்டிப்பார்த்தால், ஒரு புட்டியில் விஷம், ஒரு வெள்ளைத்தாள் ஆகியவற்றைக் கண்டான். போர்ச்சேவகனோ அயர்ந்த நித்திரையில் இருந்தான். சேவகரிலேயே உண்மைச் சேவகன் இங்கு இப்படி தற்கொலை முயற்சியில் இருப்பதைக் கண்டு, அதிர்ச்சியடைந்த இராஜா, அருகில் இருந்த

வெள்ளைத்தாளைப் பார்த்தான். அதில் அந்த போர்ச்சேவகனின் குடும்பத்தினுடைய கடன் பட்டியல் எழுதப்பட்டு இருந்தது. பல இலட்சங்கள் கடன். கீழே யார் இந்த கடனை எனக்காக செலுத்து வார்கள் என்றும் எழுதப்பட்டு இருந்தது. இராஜா நான் செலுத்து வேன். "என் சொத்து, உன் சொத்து" என்று எழுதி தன் முத்தி ரையை பதித்துவிட்டு சென்றுவிட்டார். பாதி இரவில் பதறி எழுந்த போர்ச்சேவகன் இராஜமுத்திரை கண்டு அதிர்ச்சி யடைந்தான். காலையிலேயே பணம் வந்தது. கடன் தீர்ந்தது. இராஜா தன் ஒரே மகளுக்கு அவனைத் திருமணம் செய்து வைத்தான். கடன் மாறியது மட்டுமல்ல. கடன்காரன் அரசனானான்.

இதுதான் நமது இரட்சிப்பின் வேளையில் நடந்தது. நமது கடனும் இயேசுவின் ஜீவனால் அடைக்கப்பட்டுவிட்டது. நாம் சகல ஐசுவரியம் உள்ளவர்களாகும்படி அவரது மணவாட்டியாகவும் மாறிவிட்டோம். இது சத்தியம். இதை விசுவாசித்தால் பரிசுத்தமோ, பணமோ, பெலமோ, தாராளமாக வெளிப்படும்.

கிறிஸ்து நம் ஆத்துமாவில் இருப்பதால் நம் வியாதியை மட்டுமல்ல, ஆயிரங்கள் வியாதியை குணமாக்குகிற வல்லமையும் நமக்குள்ளேயே உண்டு.

"உங்களுக்குள் எல்லா ஆவிக்குரிய ஐசுவரியமும், பொருளாதார ஐசுவரியமும், ஞான ஐசுவரியமும் இருக்கிறதே. அந்த ஐசுவரியத்தை விசுவாசித்து உரிமை பாராட்டி வெளியே கொண்டு வந்து நிஜ உலகில் சுகமாக வாழுங்கள். சரீரத்தில் சுகமாய் இருங்கள்" என்று தான் யோவான் வேண்டிக் கொள்கிறார்.

எனவே **சுகத்திற்காக ஜெபிக்காமல், சுகம் எனக்குள் உண்டு அதற்காக துதிக்கிறேன் என்று துதித்தால் உள்ளே இருக்கிற சுகம் வெளிப்படும்.** சுகம் மட்டுமல்ல தேவ இராஜ்யத்தின் சகல பொக்கிஷமும் நமக்குள் உண்டு (1கொரி.3:21-23) **'எல்லாம் உங்களுடையதே.'** என்று வேதம் சொல்லுகிறது. இந்த "எல்லாம்" என்பதில் சுகமும் அடங்கியிருக்கிறது. விசுவாசியுங்கள். உரிமை பாராட்டுங்கள். அனுபவியுங்கள்.

## அத்தியாயம் 4

# பரம சுகமும் பரிசுத்த ஆவியானவரும்

அந்த நதி பாய்ந்த இடமெங்குமுள்ள யாவும் ஆரோக்கியப்பட்டுப் பிழைக்கும்.. (எசே.47:9)

பரிசுத்த ஆவியானவர் பரம சுகம் தரும் ஆவியானவர். பரிசுத்த ஆவியானவரின் அற்புத வல்லமை அசுத்த ஆவிகளின் வியாதிகளைவிட பல மடங்கு வல்லமை வாய்ந்தது. ஒரு நதி உண்டு. அது உன்னதமானவர் வாசம் பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தை சந்தோஷிப்பிக்கும்.

பரிசுத்த ஆவியானவர் நதி போன்றவர். ஏதேனிலேயே ஒரு நதியை நான்கு பிரிவுகளாக பாய வைத்தார். தோட்டமெங்கும் செழிப்பு வந்தது. அதுபோல ஒவ்வொரு தேவ பிள்ளையையும், அவர்கள் குடும்பத்தையும், அவர்கள் சபையையும் சுகத்தால் செழிக்கச்செய்ய பரிசுத்த ஆவியானவராகிய நதி இன்றும் பாய்கிறது.

எசேக்கியேல் கண்ட தரிசனத்தில் நதியானது தேவாலயத்தின் கீழ் திசையிலிருந்து பாய்ந்து தேசம் முழுவதையும் செழிப்பாக்குகிறது. **சுகம் தரும் கனி நிறைந்த மரங்களை உருவாக்குகிறது.** சவக்கடலை ஜீவக்கடலாக மாற்றிற்று. ஆம், ஆவியானவர் நதியால் தேசமே செழிப்பாக முடியும். தேசமே சுகம் பெற முடியும். **அவருடன் உள்ள உறவால் சுகம் எனும் கனி நம்மில் உருவாகிறது.**

ஆவியானவர் நமது தனிவாழ்வு என்கிற தோட்டத்தில் பாய்ந்து கொண்டு இருப்பதால் தனிப்பட்ட விதத்தில் நமக்கு பரிபூரண சுகம் சொந்தம். அவர் நமது குடும்பத்தில் பாய்ந்து கொண்டு இருக்கிறார். எனவே நமது குடும்பத்தில் சுகம் நிச்சயம். அவர் நமது சபைகளில், தேசத்தில் பாய்ந்து கொண்டிருக்கிறார். சபைகளும் தேசமும் நிச்சயம் ஆரோக்கியமடையும்.

சாத்தான் எவ்வளவு வேகமாக தேவ மக்களுக்கும், தேசத்திற்கும் விரோதமாக வேலை செய்கிறானோ, அதைவிட பல மடங்கு அதிகமாய் ஆவியானவர் வேலை செய்கிறார். சாத்தான் தேவ மக்கள் வாழ்வில் எப்படி வியாதிகளை தருகிறான் என்பதை பார்க்கிறோம். தேசத்தில் வியாதிகளைப் பெருக்கும் பிசாசின் கிரியைகளின் மேலேயே கவனம் வைத்து சோர்ந்து போகிறோம்.

ஆனால் மறைமுகமாக வேகமாக கிரியை செய்து கொண்டிருக்கும் ஆவியானவரை நாம் பார்க்க வேண்டும். அவர் ஒரு போதும் தோற்க மாட்டார். **அவரை சந்தோஷப்படுத்தி விட்டால் சுகம் நமதுதான்.** அவரை எப்படி சந்தோஷப்படுத்த முடியும்?

அவரைப் பார்த்து "தினமும்" ஆவியானவரே "நீர் என்னோடு இருப்பதற்காக நன்றி. நீர் தான் எனக்கு எல்லாம். நீர் தான் என் பாஸ், இந்த நாள் முழுவதும் நீர் சொல்வதை மட்டும் கேட்கச் செய்யும். எனக்குள் இருக்கிற வல்லமையைக் கட்டவிழ்த்துவிடும்." என்று கேட்க வேண்டும். வாழ்வின் சிறிய காரியமோ, பெரிய காரியமோ, அது குறித்து நம்மோடு எப்பொழுதும் இருக்கும் ஆவியானவரிடம் பேசி, அதற்கான பரிகாரத்தைப் பெறவேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக நேச வார்த்தைகளை அவருடன் பேச வேண்டும். "ஆவியானவரே! நான் உம்மை எல்லாரையும் விட அதிகமாய் நேசிக்கிறேன். எல்லாரையும் விட அதிகமாய் உம்மைக் கனம் பண்ணுகிறேன். உம்மை விட சிறந்தவர் இல்லை." என்று அவருடன் உள்ள உறவை உறுதிப்படுத்த வேண்டும். அவருடன் சேர்ந்து தேவனை ஆராதிக்க வேண்டும். அவர் நடத்தும் காரியங்களை செய்து விட வேண்டும் அவருடன் உள்ள ஐக்கியமே நம் சுகம். அவரை நெருங்க நெருங்க வியாதிகள் விலகி விலகி ஓடும். சுகமளிக்கிற வரமும் ஆவியானவரின் சொத்து. அவருடன் பழகும் போது சுகமளிக்கிற வரத்தினால் வெளிப்படும் சுகம் நம்மூலம் வெளிப்படும்.

**அத்தியாயம் 5**

# சுகமும் தேவசித்தமும்

'எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு' மத். 8:2

முதலாவது, தேவன் மனுஷனை தமது சாயலிலேயே உண்டாக்கினார். அவர் சாயல் வியாதி இல்லாத ஆரோக்கிய சாயல். ஓடினாலும் இளைத்துப்போகாத சாயல். எனவே அவர் சாயலில் இருக்க உருவாக்கப்பட்ட நம்மில் வியாதி தேவ சித்தமல்ல.

இரண்டாவது, பொல்லாத பெற்றோரே பிள்ளைகள் சுகவீனமடைவதை விரும்பமாட்டார்கள். பரமபிதா தம் பிள்ளைகள் சுகவீனமாய் இருப்பதை எப்படி விரும்புவார். அவர் நல்ல ஈவாகிய சுகத்தைக் கொடுப்பது எவ்வளவு நிச்சயம்.

வியாதி தேவசித்தமில்லை. காரணம் தேவன் தம் பிள்ளைகளுக்கு அன்பு தகப்பன். தன் பிள்ளைகள் வியாதி, வேதனையில் கஷ்டப்படுவதை அவரால் பொறுத்துக் கொள்ள முடியாது.

மூன்றாவது, அவர் வியாதியை சிலுவையில் சுமந்து தீர்த்த பின்பு நாம் சுமப்பது தேவ சித்தம் இல்லை. சிலர் வியாதியைக் கர்த்தர் கொடுத்த சிலுவை என்கிறார்கள். அவர் நாமத்தினிமித்தம் வருகிற எதிர்ப்புகள், நிந்தைகள் சிலுவையாகலாம். ஆனால் சாத்தான் சரக்கான வியாதி ஒருக்காலும் சிலுவையாகமுடியாது.

நான்காவதாக, தன்னிடம் சுகத்திற்காக வந்த ஒருவரையும் அவர் சுகமாக்காமல் விடவில்லை. யாவரையும் குணமாக்கினார். "சித்தமுண்டு, சுத்தமாகு" என்றார். கிறிஸ்து இயேசு நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். அன்று தன்னிடம் வந்த எல்லாரையும் குணமாக்கினவர் இன்று மாறிவிட்டாரா? பாரம்பரியம் குஷ்டரோகியை தள்ளிவைத்தது. இன்றும் நமது பாரம்பரிய குற்றவுணர்வு தேவபிள்ளைகளை சுகத்தைவிட்டு தூரமாக்குகிறது.

இயேசுவின் மனதுருக்கம் குஷ்டரோகியை தொட்டு சுகமாக்கியது. இன்றும் மாறாதது. இன்றும் அவரிடம் வருகிற எவரிடமும் சித்தமுண்டு சுத்தமாகு என்பார்.

ஐந்தாவதாக, தேவனிடம் பட்சபாதம் இல்லை. பலருக்கு அவர் இப்பொழுதும் சுகம் கொடுக்கிறார். அவர் பலருக்குக் கொடுப்பது உண்மையானால், ஒவ்வொருவருக்கும் கொடுப்பதும் உண்மை. காரணம் அவரிடம் பட்சபாதமில்லை. தமது எல்லாபிள்ளைகளையும் பூரண சுகத்தோடு பார்க்க விரும்புகிறார்.

ஆறாவதாக, அவர் சுகத்தை வாக்கு பண்ணியிருக்கிறார். எனவே சுக வாழ்வு தேவசித்தம் உன் சுக வாழ்வு துளிர்க்கும். நோய்களை எல்லாம் குணமாக்குகிறார். கர்த்தருக்கு பயந்தவர்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அவர் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும் என சுகத்திற்காக பல வாக்குகளை தேவன் தந்திருக்கிறார். அவர் வாக்கு மாறாதவர். தமது சித்தப்படி வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் தமது சித்தப்படி செய்த வாக்கைத் தவறாமல் நிறைவேற்றுவார்.

ஏழாவதாக, இயேசு பிசாசின் கிரியைகளை அழிக்க வெளிப்பட்டார். (1யோ.5:7) அவர் வியாதிகளை அழிக்கிறார். அவர் வியாதிகளை அழித்து சுகம் கொடுக்கிறவர். வியாதிகளைப் பார்க்கும்போது கிறிஸ்து கோபப்படுகிறார். தான் விரோதிக்கிற, வைராக்கியமாய் எதிர்க்கிற சாத்தான் சரக்கை, தன்னுடைய பிள்ளைக்குள்ளே அனுமதிக்க மாட்டார்.

தேவ சித்தமறிந்து, தேவனைப் போலவே, வியாதியைப் பார்த்து வியாதியை எதிர்த்தால், தேவ சித்தப்படி வியாதியில்லாத வாழ்க்கை வாழலாம்.

**அத்தியாயம் 6**

## முதல் சுகம்.

'ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக் கொண்டான். அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும் அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளை பெறும்படி அனுக்கிரகம் பண்ணினார்.' (ஆதி. 20:18)

ஒரு குறிப்பிட்ட சத்தியத்திற்கு வெளிச்சம் தரும் சாவி வசனம், அந்த சத்தியத்தைக் குறித்து வேதத்தில் வரும் முதல் வசனம். சுகத்தைக் குறித்து வரும் முதல் சம்பவம் ஆபிரகாம் அபிமெலேக்கு இராஜாவை குணப்படுத்திய சம்பவம். இது ஒரு திரள் கூட்ட சுகம்.

தேவன் தமது திரள் கூட்ட சுகமளிக்கும் ஊழியத்தை உலகின் மூலையில் அல்ல. ஒரு அரண்மனையில் ஆரம்பித்தார். ஏதோ ஒரு சிலருக்கு மட்டும் அல்ல. முதல் முறை சுகத்தை வெளிப்படுத்தும்போதே திரள்கூட்ட ஜனத்திற்கு வெளிப்படுத்தினார். அதற்கு பயன்பட்ட பாத்திரம் நமது விசுவாச தகப்பனும், முதல் தீர்க்கதரிசியுமான ஆபிரகாம்.

இங்கு வந்த வியாதி கர்ப்ப அடைப்பு. இது ஒரு சாபமாகவும், ஊழியக்காரரின் மனைவியைக் கடத்தியதற்காக தரப்பட்ட ஒரு நியாயத்தீர்ப்பாகவும் வந்தது. இந்த சம்பவத்தின் மூலம் வியாதி என்பது பாவ கிரியைக்காக அளிக்கப்படும் சாபமும், தண்டனையும் என அறிகிறோம். எல்லா வியாதிகளும் அல்ல.

அதோடு மட்டுமல்ல, **மனஸ்தாபமும், மன்னிப்பு கோருதலும், மனத்தாழ்மையும் அவ்வித வியாதிக்குப் பரிகாரம் என்றும் அறிகிறோம்**. இங்கே அபிமெலேக்கு சாராளை

ஆபிரகாம் மனைவி என்று அறியாமல் கடத்தினாலும் தேவன் அவன் மனந்திரும்புதலைத் தாழ்த்தும் வரை இறங்கவில்லை. அபிமெலேக்கு இராஜாவாக இருந்தாலும் தேவன் முன்பும் தன்னைத்தாழ்த்தி தன் கிரியைக்காக மனஸ்தாபப்பட்டான். உடனே தேவன் இறங்கினார்.

அதோடு ஒரு தலைவனது உத்திரவாதத்தையும் நம்மால் அறிய முடிகிறது. தலைவனது தவறு முழு அரண்மனைக்கும் சாபத்தைக் கொண்டு வந்தது. தலைவனது திருந்துதல் அரண்மனை முழுவதற்கும் சுகத்தைக் கொண்டு வந்தது.

இங்கு தீர்க்கதரிசிக்கு தேவன் தரும் பாதுகாப்பையும், கனத்தையும் காணமுடிகிறது. தீர்க்கதரிசி ஆபிரகாமிற்காக தேவன் ஒரு நாட்டு இராஜாவையும், மந்திரியையும், இராஜாவின் மனைவி, மறுமனையாட்டிகள், சேவகர் யாவரையும் வாதித்தார். **தீர்க்கதரிசியின் ஜெபம் நாட்டுக்கே சுகத்தைத் தந்தது.**

மன்றாட்டு ஜெபத்தின் மாண்புதான் என்னே! அதை விவரிக்கவே முடியாது. ஒரு தேசமே எழுப்புதல் அடைந்தது. தேசமே சுகமானது. தேசத்தின் சாபம் நீங்கியது. தனி மனிதன் ஆபிரகாம் மூலம் தேவன் கொடுத்த திரள் கூட்ட சுகமும், தேவன் அனுப்பிய எழுப்புதலும் நமக்கு ஒரு பெரும் சவால்.

தனிமனிதன் மூலம் தேசத்திற்கே சுகம் கொடுத்த கர்த்தர், இராஜாவையும் அரண்மனையின் அதிகாரிகள் அனைவரையும் சந்தித்த கர்த்தர், இந்த கடைசி நாட்களில் சபையில் உள்ள தமது திரளான பிள்ளைகள் மூலம் நாடுகளை அசைப்பார். கோடிக்கணக்கான ஜனத்திற்கு சுகம் அருள்வார் என்பதை தீர்க்கதரிசனமாக உரைக்கிறது. **கடைசிகால எழுப்புதல் ஒரு தீர்க்கதரிசன எழுப்புதலாக இருக்கும்.** கொரியாவின் பாஸ்டர் பால் யாங்கி சோவின் தேவன் நமது தேவன் அவர் பட்சபாதம் இல்லாதவர்.

## அத்தியாயம் 7

# குடும்ப டாக்டர்

**'நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்'** (யாத்.15:22-27)

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு விசேஷ டாக்டர் உண்டு. ஆனால் ஒரு தேவபிள்ளையின் குடும்ப டாக்டர் தேவனே. "யேகோவா ராபா" என்று அழைக்கப்படும் பிதா, சுகமளிக்கிறவர். **கத்தியின்றி, இரத்தமின்றி ஆதாமின் எலும்பை எடுத்தார். ஏவாளை உருவாக்கினார்.** அவர் நரம்பியல் நிபுணர். அவர் இருதயம் உருவாக்கும் நிபுணர். அவரே கண், காது, மூக்கு, தொண்டை உருவாக்கிய நிபுணர். அவரே எலும்புகளை உருவாக்கிய நிபுணர். அவரே தோல் நிபுணர் கூட, அவருக்கு நிகர் அவரே. அவ்வளவு நேர்த்தியாக, குறைவில்லாமல் நிறைவான வடிவு கொடுத்து மனிதனை உருவாக்கிய அவரே மனிதனின் உறுப்புகளில் வரும் எந்த வியாதிக்கும் பரிகாரி.

அவர் வியாதிக்கிருமிகளை அழிப்பார். இல்லையென்றால் புது உறுப்புகளையே அருளுவார். ராபர்ட் லியனார்டு என்னும் தேவ ஊழியர் சிறு வயதிலேயே பரலோகத்திற்கு ஆவியில் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் அங்கு கண்ட காட்சிதான் என்ன? அங்கு பல அறைகள் அதில் ஒரு அறை முழுவதும் கண்கள், கால்கள், நுரையீரல்கள், சிறுநீரகங்கள் என சரீரத்தில் உதிரி பாகங்கள் வைக்கப்பட்டு இருந்தன. ராபர்ட் லியானர்டு தேவனிடம் இவைகள் ஏன் என்று கேட்டதற்கு தேவன் அளித்த பதில் "உரிமை பாரட்டப்படாத பொக்கிஷம்" என்றார்.

உரிமை பாராட்டினால் மனிதனுக்கு புதிய உறுப்புகள் (Spare parts) ரெடி. நாங்கள் நடத்தும் 10 நாட்கள் குறுகிய கால பயிற்சி பள்ளி ஒன்றில் தேவதூதரைக்குறித்து போதித்தேன். சுகமளிக்கும் தேவதூதரைக்குறித்தும்

போதித்தேன். போதித்து முடிவில் ஜெபிக்கும்போது, ஒரு சகோதரன் தேவதூதன் ஒருவன் ஒரு தட்டில் ஒரு புது இருதயத்தைக் கொண்டுவருவதைப் பார்த்தார். உடனே இன்னொரு நபர் கதறினார். அவரும் தேவதூதன் வந்து தனக்கு புதிய இருதயத்தைப் பொருத்துவதைக் கண்டதால் அவரால் அழுகையை நிறுத்த முடியவில்லை. முடிவில் சாட்சி நேரத்தில் சுகம் பெற்றவரும், தரிசனம் பெற்றவரும் கொடுத்த சாட்சி யாவரையும் ஆனந்தத்திலும், ஆச்சரியத்திலும், ஆழ்த்தியது. ஆம்! இருதய நோய் நீங்கியது. புது இருதயம் பொருத்தப்பட்டது. இப்படி பற்பல சாட்சிகளை என்னால் சொல்ல முடியும்.

**'இஸ்ரவேலுக்கு' நான் பரிகாரி 'குடும்ப டாக்டர்' என்று யேகோவா ரபாவே தன்னை அறிமுகப்படுத்தினார். கசந்த மாராவின் தண்ணீரை மதுரமாக்கினார்.** ஆம்! வியாதி கசப்பானது. வியாதி வந்தால் மன அமைதி குலையும். குடும்ப நிம்மதி கெடும். சரீர பெலன் ஒடுங்கும். நேரமும், பணமும் வீணாகும். பயமும், திகிலும் தாக்கும். எதிர்காலம் இருளாகத்தெரியும். ஜெபம் குறையும். அவிசுவாசம் மேலோங்கும். வேலை, குடும்பம், மற்றும் ஊழிய முன்னேற்றம் தடைபடும். எனவே வியாதி போல கசப்பு ஏதும் இல்லை. இந்த கசப்பை பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் நீக்குவதில் வெகுவேகமாக கிரியை செய்கிறார்கள்.

வேதம் முழுவதும் திரியேக தேவன் சுகம் கொடுத்த சம்பவங்கள் திரளாக எழுதப்பட்டுள்ளது. ஏன்? தேவன் சுகமளிக்கிறவர் என்பதை யாவரும் அறியவே.

**அத்தியாயம் 8**

# உன்னதமானவரின் மறைவு

**'உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்'** சங். 91:1-16

சங்கீதககாரன் தெய்வீக சுகத்துக்குரிய இரகசியங்களை வெளிப்பாடுகளை எழுதிய சங்கீதம்தான் 91 ஆம் சங்கீதம்.

அதில் அவர் வியாதியை வேடனுடைய கண்ணி என்கிறார். அது இரவில் உண்டாகும் பயங்கரம். பகலில் பறக்கும் அம்பு. இருளில் நடமாடும் கொள்ளை நோய். மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரம். இவ்வித வியாதிகள் விக்கினங்கள், விபத்துக்கள், பதினொராயிரம் அசுத்த ஆவிகள் ஒரு தேவபிள்ளைக்கு விரோதமாக எழும்பும்போது நடப்பவைகள்.

ஆனால் அவ்விதம் எழும்பும் **வியாதிகளும் அசுத்த ஆவிகளும் தொட முடியாத உன்னதமானவரின் உயர் மறைவில் நாமிருக்கிறோம்**. வாதை நம் கூடாரத்தை அணுகவிடமாட்டார். பொல்லாப்பு நேரிடாது. பாதம் கல்லில் இடறாது. சிங்கம் பால சிங்கம் போன்ற அசுத்த ஆவிகளையும், வியாதிகளையும் காலின் கீழ் மிதிப்போம்.

ஆபத்துக் காலத்தில் தேவதூதர்கள் காப்பார்கள். பிரயாண பாதுகாப்பு இருக்கும். நீண்ட ஆயுள் ஒவ்வொரு தேவ பிள்ளையின் சுதந்திரம்.

இந்த எல்லா ஆசீர்வாதங்களுக்கும் கொடுக்கப்படும் ஒரே நிபந்தனை அவர் மேல் வாஞ்சை தேவை. அவர் மேல் உள்ள பிரியம், உறவு (சங். 91:4) அவருக்கு அருகில் நம்மை வைக்கிறது. அவர் அருகில் வியாதி நெருங்காது.

கோழி தன் குஞ்சுகளை செட்டைகளால் மூடி மறைப்பது போல, தேவனும் தமது "சுகம்" எனும் செட்டைகளால் அவர் மேல் வாஞ்சையாகவும், பிரியமாயும் இருக்கிற ஒவ்வொருவரையும் மூடுகிறார். ஆபத்தில் கூட இருந்து விடுவிக்கிறார். நீடித்த நாட்களால் திருப்தியாக்குகிறார்.

தேவன் பேரில் பிரியமாக இருக்கிற பிள்ளை வாழ்ந்து "போதும்! போதும்" என்று திருப்தியாகி சொல்கிற வரையில் நீண்ட ஆயுளோடு வைக்க தேவன் வாக்கு பண்ணுகிறார். (சங்.91:10)

தெய்வீக சுகத்தின் முடிவு வியாதி வராத ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும்தான். உன்னதமானவரின் மறைவில் கொள்ளை நோய் வர முடியாது. பிறருக்கு கொள்ளைநோய் வரலாம். ஆனால் தேவ மக்களை அது அணுகாது. (சங். 91:10) உன்னதமானவரின் செட்டையின் கீழ் இருக்கும் சுகப்படுத்தும் வல்லமை, வியாதிக்கிருமிகளின் வல்லமையை விட மேலானது.

உன்னதமானவருடைய பாதுகாப்பின் வல்லமை வியாதி துளைக்க இயலாத உறமும் உறுதியுமானது. (This can be called the roof of sickness proof) அவர் மேலும் கீழும், வலதும் இடதும், சுற்றிலும் முற்றிலும் மூடி காக்கிறார். எனவே வியாதி பயமில்லாமல் வாழலாம். கொடிய வியாதிகள் தேவ மக்களை தொடவே முடியாது. அவரே காக்கும் ஆயுதமாகவும், தாக்கும் ஆயுதமாகவும் செயல்பட்டு, வியாதிகளை அழிப்பதோடு வியாதி அணுகாத பாதுகாப்பு, ஆரோக்கியத்தைக் கையளிக்கிறார். முதிர் வயதிலும் கனி தருவேன். புஷ்டியாக இருப்பேன் என்று அறிக்கையிடுகிற விசுவாச மனிதர்கள் ஏறத்தாழ 80 வயது ஆகியும் இன்றும் புது பெலத்தோடும் ஆரோக்கியத்தோடும் இருப்பதை நானறிவேன். எனவே நீங்களும் அப்படி நீண்ட ஆயுளுக்கான வாக்குகளை அறிக்கையிடுங்கள். சுகத்தோடு நீண்ட நாட்கள் வாழந்து கனி கொடுங்கள்.

அத்தியாயம் 9

# நீதியின் சூரியன்

'என் நாமத்துக்கு பயப்படுகிற உங்கள் மேல் நீதியின் சூரியன் உதிக்கும். அதின் செட்டைகளின் கீழ் ஆரோக்கியம் இருக்கும். நீங்கள் வெளியே புறப்பட்டு போய், கொழுத்த கன்றுகளைப் போல வளருவீர்கள். (மல். 4:2)

பிதாவின் நாமத்திற்கு பயப்படுகிறவர்கள் மேல் குமாரன் நீதியின் சூரியனாக உதிக்கிறார். அவர்களுக்கு ஆரோக்கியம் உணடு. சூரியனுடைய காந்திக்கு மறைவானது ஒன்றுமில்லை. அது உலகமெங்கும் ஜொலிக்கிறது. அதின் கிரணங்கள் போய் சேர முடியாத எல்லை உலகில் இல்லை. கிறிஸ்துவின் ஒளிக்கதிரால் குணமாக்க முடியாத வியாதி இல்லை. கேன்சர் இல்லை.

நீதி தகுதியைக் குறிக்கிறது. வெளிச்சம், ஞானத்தையும் வெளிப்பாட்டையும் குறிக்கிறது. **அவருக்குப் பயப்படுகிற அவரது பிள்ளைகளான நமக்கு அவரே தகுதி.** அவரே நமக்கு ஞானம். அவரே நமக்கு வெளிப்பாடு.

வியாதிக்குக் காரணம் "தகுதி இல்லை" என்கிற பாரமும் துக்கமுமான சிந்தையே. கவலைப்படுகிறவர்களே வியாதிக்குக் காரணமாகிறார்கள். அவரையே தமது நீதியாகும் தகுதியாக ஏற்கிறார்கள். நடுப்பகல் வரைக்கும் உதிக்கிற ஒளியைப் போல ஜொலிப்பார்கள். (நீதி.4:18) உதிக்கிற அவர்கள் வெளிச்சத்திற்கு இராஜாக்கள் நடந்து வருவார்கள்.அவரை நீதியாகவும், வெளிச்சமாகவும் கொண்டவர்கள், வியாதி முறியடிக்கப்பட்டதையும், சுகம் அருளப்பட்டு இருக்கும் வெளிச்சத்தையும் உடையவர்கள்.

அவர் வெளிச்சமாக இருப்பதால் வியாதியைக் குறித்த வெளிப்பாடுகள் பெறலாம். சத்துருக்களை அடையாளம் கண்டு கொண்டு மிதிக்கலாம். சத்துருக்களை தீக்கிரையாக்கி, சாம்பலாக்கலாம்.

கிறிஸ்து நம்மை நீதிமான்களாக்க நமக்காக பாவமாக மாறி இருக்கிறார். அவர் நீதி நம்மேல் இருக்கிறது. பிதா அவரது வெளிச்சத்தை நமது வெளிச்சமாக மாற்றி இருக்கிறார். எனவே தேவனால் நீதிமான்களாக மாறிய நம்மை எவரும் குற்றம் சாட்ட இயலாது.

ஒரு லட்சம் ரூபாய் கடன் போல நாம் செய்த பாவம் இருந்தது. ஆனால் நம் மேல் உதித்ததும் அவர் நமக்குத் தந்ததுமான நீதியோ 1 கோடிக்கு மேல் மதிப்புள்ளது. அது நமது கடனை அடைத்தது, நமது அநீதியைத்தீக்கிரை யாக்கினதுமல்லாமல் நம்மை நீதியாகவும் மாற்றி இருக்கிறது. நம்மை பணக்காரராகவும் மாற்றி இருக்கிறது. அவரே நமக்கு நீதியானார். வியாதி மறைந்து சுகம் துளிர்க்கிறது. (ஏசா.58:8) அவர் வெளிச்சத்திலே நாம் வெளிச்சம் காண்கிறோம். நமது ஒளி வந்திருக்கிறது. கர்த்தர் நம்மேல் உதித்திருக்கிறார். இது நாம் எழும்பிப் பிரகாசிக்க வேண்டிய நேரம். (ஏசா.61:1)

இருளில் வெளிச்சத்தை பிரகாசிக்க சொன்ன தேவன் நமது உள்ளத்தில் பிரகாசிக்கிறார். (2 கொரி.4:6) எனவே எல்லா ஞானமும், வெளிப்பாடுகளும் நம்முடையது. எந்த இருளான வியாதிக்கும், சாபத்திற்கும் நம்மேல் அதிகாரம் இல்லை.

ஒளி வரும்போது, ஒளியானது இருளை அகற்ற இருளோடு சண்டையிட அவசியம் இல்லை. இருள் தானாக விலகிவிடும். அது போல **வியாதியாகிய இருளும், நீதியின் சூரியனது கதிர் வரும்போது மறைகிறது.**

அந்த சூரியனது உஷ்ணம் வியாதி பெலவீனத்தை நீக்குவது மட்டுமல்லாது, திடத்தையும், பெலத்தையும் தந்து கொழுத்த கன்றுகளைப் போல துள்ளப் பண்ணி, வெளியே புறப்பட்டுப்போகப் பண்ணுகிறது.

பிறரது வியாதிகளுக்கும் நம்மை ஜெபிக்கவைக்கிறது. பிறரது எல்லா வியாதிகளையும் சாம்பலாக்கி, நமது காலுக்கு கீழாக்குகிறது. சகல வியாதிகளும் நமது அதிகாரத்திற்குக் கீழ்தான். நியமிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பை நாம் வியாதியின் மேல் கூற முடியும். வியாதியை குற்றவாளி கூண்டில் ஏற்றி, நாம் நியாயாதிபதியாக மாறி, வியாதியே! நீ ஏன் இவ்வளவு நேரத்தை, பணத்தை, சமாதானத்தை பெலத்தை திருடினாய். நான் உன்னை நியாயம் தீர்க்கிறேன். நீ விலகி அழிந்து போ. எனக்கு 7 மடங்கு நஷ்ட ஈடு தா என்று சொல்ல முடியும். இந்த சுதந்திரம் பரிசுத்தவான்களுக்குரியது. தேவபிள்ளைகளுக்கு தேவன் தந்த கனம் நியாயாதிபதியாக செயல்படும் சுதந்திரம். (சங்.149:1-9)

**அத்தியாயம் 10**

# சகல வியாதிகள் மேல் அதிகாரம்

அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும், தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளை துரத்தவும், சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். (மத்.10:1) (லூக்.10:18-21)

உலகத்தில் சகல வியாதிகள் மேல் அதிகாரமுள்ள நபர் இல்லவே இல்லை. தேவன் ஒரு தேவ பிள்ளையை "டாக்டர்களுக்கு டாக்டராக" வைத்து இருக்கிறார். பிதா எப்படி தன்னை அனுப்பினாரோ, அப்படியே ஒரு தேவபிள்ளையை உலகத்திற்குள் ஊழியம் செய்ய அனுப்புகிறார். எனவே அவர் சகல வியாதிகளை குணமாக்கியது உண்மையானால், நாமும் சகல வியாதிகளையும் குணமாக்குவது உண்மை. அது எளிது.

இயேசுவினுடைய கலாசாலையில் மாணவர்களாகிவிட்ட தேவபிள்ளை ஒவ்வொருவருக்கும் மருத்துவர் (MBBS டிகிரியை விட மேலான டிகிரி) என்கிற பட்டத்தையும், சகல நோய்கள் மேல் அதிகாரத்தையும் கையளித்து இருக்கிறார். We are heavenly Registered practioners. **நாம் பரலோக அங்கீகாரம் பெற்ற சுகமளிக்கும் டாக்டர்கள்.**

அவரது அதிகாரத்தில் "நான் போக மாட்டேன்" என்று மறுப்பு சொல்லவும், சவால் கொடுக்கவும் வியாதிக்கு அதிகாரமே இல்லை. காரணம் அவர் அதிகாரம் நமது அதிகாரம். நாம் அவரது அதிகாரத்தில் நின்றால் அவரே நிற்பது போல. அவருக்கு முன்பாக எந்த வியாதியும் நிற்க இயலாதது உண்மையானால், நமது முன்பாகவும் எந்த வியாதியும், பெலவீனமும் நிற்க முடியாது. சத்தியம் என்னவென்றால் எல்லாவித வியாதிக் கிருமிகளும், வியாதிகளுக்கு பின்னால் இருக்கிற அசுத்த ஆவிகளும் ஒரு தேவபிள்ளையைக் கண்டாலே நடுநடுங்குகின்றன.

அவைகளுக்கு ஒரு தேவபிள்ளை நடுங்கத் தேவையே இல்லை.

ஒரு தேவபிள்ளை அதிகாரி, வியாதி உதவியாள். ஒரு அதிகாரி கட்டளையிடும்போது உதவியாள் கீழ்படிவது போல வியாதி கீழ்ப்படியும். ஒருவனை ஒரு அதிகாரி "வா" என்றால் வருகிறான். "போ" என்றால் போகிறான். "செய்" என்றால் செய்கிறான். அதுபோல நாம் வியாதிக்கு அதிகாரிகள். நாம் வியாதியின் பெயரைச் சொல்லி, "வியாதியே! போ" என்றும் "சுகமே வா" என்றும் சொல்ல வேண்டும். பின்பு நீங்கள் செய்ய முடியாததை செய்யுங்கள் என்று சொல்ல வேண்டும். இதுதான் வியாதி மேல் அதிகாரத்தைச் செலுத்த வேண்டிய வழிமுறை.

சீஷர்களுக்கு அதிகாரம் கொடுத்து அனுப்பிய பின்பு சீஷர்கள் வியாதியஸ்தர்களை குணமாக்கி, பிசாசுகளை துரத்தி வெற்றியாக திரும்பும்போது இயேசு ஆவியில் களிகூர்ந்தார். "ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து பாலகருக்கு வெளிப்படுத்தியபடியால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்றார். (லூக். 10:17-21)

ஆம்! வியாதியின் மேல் அதிகாரம் என்கிற சத்தியம் கல்விமான்களுக்கு மறைக்கப்பட்டு இருக்கிறது. குழந்தைகளுக்கு வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. குழந்தையைப் போல மாறாவிட்டால், அதிகாரம் விளங்கும் தேவ ராஜ்யத்திற்குள் நுழையமுடியாது.

இயேசுவைக் களிகூரவைப்பதற்கு வழி, சகல வியாதிகள் மேல் நமக்கு இருக்கிற அதிகாரத்தை அறிந்து உபயோகிப்பதே. பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டு இருக்கிற ஒவ்வொருவருக்கும் அவர் தமது நாமத்தை பயன்படுத்தும் உரிமை தந்து இருக்கிறார். அவர் நாமத்தில் சகல வியாதிகளும் மண்டியிடும். தேவபிள்ளைகளே! வியாதியின் மேல் உங்களுக்கு இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள். உங்கள் ஆண்டவரை ஆனந்தமாக்குங்கள்.

**அத்தியாயம் 11**

## சுகமும் தேவ தூதர் பணியும்

'சில சமயங்களில் தேவதூதன் ஒருவன் அந்த குளத்தில் இறங்கி, தண்ணீரைக் கலக்குவான். தண்ணீர் கலங்கின பின்பு யார் முந்தி இறங்குவானோ, அவன் எப்பேர்ப்பட்ட வியாதியஸ்தனாக இருந்தாலும் சொஸ்தமாவான்.' (யோ.5:4)

நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாட்களில், ஒரே ஒரு தூதன் சுகமளிக்கிற வேலையை செய்ய பூமிக்கு இறங்கிவந்தான். தூதர்களில் பல வகை உண்டு. ஆராதனை தூதர், ஜெப தூதர், யுத்த தூதர், செய்தியளிக்கும் தூதர், பணிவிடை தூதர், பாதுகாக்கும் தூதர், சுகமளிக்கும் தூதர் என பல வகைகள் தூதரில் உண்டு.

தேவன் பிரதான டாக்டர். ஒரு டாக்டருடன் செவிலியர்கள் உதவிக்கு இருப்பது போல, **சுகமளிக்கிற தேவதூதர்கள் சுகமளிக்கிற பணியில் தேவனுடன் இருந்து செயல்புரிகிறார்கள்**. ஒவ்வொரு விசுவாசியை சூழ ஆயிரமாயிரமான தூதர்கள் இப்பொழுது இருக்கிறார்கள். காரணம் இரட்சகர் இயேசுவை ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு தேவ பிள்ளையும் ஆயிரமாயிரமான தூதர் இருக்கிற இடத்திற்கு வந்து சேர்ந்தாயிற்று. (எபி.12:22-24) எனவே ஒவ்வொரு தேவபிள்ளையின் அருகிலும் பல வகையான தேவதூதர்கள் குறிப்பாக சுகமளிக்கிற தேவ தூதர்கள் இருப்பது உண்மை. பழைய ஏற்பாட்டு காலத்தில் சில சமயங்களில் ஒரு தூதன் சுகமளிக்க இறங்கினான்.

புதிய ஏற்பாட்டிலோ, ஒவ்வொரு விசுவாசிக்கும் சுகமளிக்கிற வேலையை கையளித்து இருக்கிறார். ஒவ்வொரு தேவபிள்ளை சுகமளிக்கிற ஊழியத்தில் ஈடுபடும்போதும் நமது கண்களுக்கு தெரியாத ஆயிரம் பதினாயிரமான தூதர்களை தேவன் அனுப்பி வைக்கிறார். ஒரே வேளையில் 72 ஆயிரம் தேவ தூதர்கள்

நமது உதவிக்கு வர முடியும். (மத்.26:53) இயேசு இரட்சகர் சிலுவைக்கு போக வேண்டியதால் இந்த தூதர் பணியை பெறவில்லை. இப்பொழுது அவர் தமது பணியை நிறைவேற்றி முடித்த பிறகு, அவர் பணி செய்கிற ஒவ்வொருவருக்கும், அவர் இந்த தூதர் படையைக் கையளித்து இருக்கிறார்.

உலகில் எந்த அதிபதிக்கும், இராஜாவுக்கும், அதிகாரிக்கும், 72 ஆயிரம் பேருள்ள பாதுகாப்புப்படை இல்லை. இந்த 72 ஆயிரம் தூதரில் பல ஆயிரங்கள் சுகமளிக்கிற தூதர்கள். எனவே தேவ பிள்ளை ஒவ்வொருவரும் சுகமளிக்கிற படைமுயற்சி முகாம்களை நடத்த முடியும்.

ஆபிரகாம் தன்னந்தனியனாக இராஜாவுக்கும், அந்நிய ஜனத்துக்கும் பயந்து, மனைவியையே அரண்மனைக்கு அனுப்பி வைத்த வேளையிலேயே தேவன் திரள் கூட்ட சுகமளிக்கிற வேலையைச் செய்து தேசத்தை சுகமாக்குவாரானால், இப்பொழுது பல ஆயிரமான தேவ மக்கள் மூலமாக எவ்வளவு அதிகமான சுகமளிக்கிற வல்லமையை பயன்படுத்த முடியும்?

அசுத்த ஆவிகள் வியாதிகளைக் கொண்டு வருகின்றன. பரிசுத்த தூதர்கள் சுகத்தைக் கொண்டு வருகிறார்கள். பரிசுத்த தூதர்கள் உணவு பரலோக மன்னா. இந்த உணவை உண்பவர்களுக்கு 40 ஆண்டுகள் நடந்தும் பெலவீனம் வர வில்லை. அவர்களில் பெலவீனப்பட்டவனும், வியாதிப்பட்டவனும் ஒருவனுமில்லை. (சங். 105:37, சங்.78:23-25) தூதர் உணவை உண்ட எலிசா 40 நாட்கள் இரவு பகலாக நடந்தான்.

தூதர் பணியால் புது சுகம், புது பெலன், புது தெம்பு உண்டாகிறது. இயேசு உபவாசத்தாலும், இரத்த வேர்வை ஜெபத்தாலும் சோர்வுறும்போது தூதர்கள் அவருக்குப் பணிவிடை செய்தார்கள். அவரை பலப்படுத்தினார்கள். (மத்.4:11, லூக்.22:43)

அது போல தேவதூதர் நமக்கு சுகம் தரவும், நம்மை பெலப்படுத்தவும் ஆயத்தமாக இருக்கிறார்கள். அவர்கள் பணியை பயன்படுத்த நீங்கள் ஆயத்தமா?

## அத்தியாயம் 12

# சுகமும் விசுவாசமும்

**'உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது'** மத். 9:29

இரண்டு குருடர்கள் ஆண்டவர் இயேசுவின் பின்னே போய், "தாவீதின் குமாரரனே! எனக்கு இரங்கும" என்று கதறி அழுது ஜெபித்தார்கள். இயேசு அவர்கள் ஜெபத்தைக் கேட்கவில்லை. அழுகையும், கதறுதலும் அவன் வியாதியை நீக்கவில்லை.

அவர்கள் கண்களை திறக்கும் அற்புத சுகத்தை கிறிஸ்து அவர்களுக்குக் கொடுக்கும் முன்பு, இதைச் செய்ய வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா? என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஆம் விசுவாசிக்கிறோம்; ஆண்டவரே! என்றார்கள். "விசுவாசிக்கிறோம்" என்று சொன்ன பொழுது கிறிஸ்து செயல்பட தொடங்கினார். "உங்கள் விசுவாசத்தின்படி ஆகக்கடவது" என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது.

**அற்புத சுகம் வெளிப்பட தேவை விசுவாசம்தான். விசுவாச அளவுதான், சுகத்தின் அளவு,** விசுவாசமில்லாத அழுகையோ, கண்ணீரோ உதவாது. கண்கள் திறக்கப்படும் நாங்கள் பார்ப்போம் என்று விசுவாசித்தார்கள். அது அப்படியே ஆயிற்று.

விசுவாசம் இல்லாத சுகத்தை இருக்கிறதாகப்பார்க்கிறது. இல்லாத சுகத்தை இருக்கிறதாக அழைக்கிறது. காணப்படாத சுகத்தின் நிச்சயம்தான் விசுவாச சுகம்

விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை விடுவிக்கும். சிலுவையிலே சுகம் தந்தார் என்பதை விசுவாசிக்கிறேன். வியாதி பிரச்சினை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு முடிக்கப்பட்ட ஒன்று.

"நான் ஏன் சுமப்பேன் நான் ஏன் சுமப்பேன் எந்தன் இயேசு சுமந்தபின்" என்ற விசுவாச பாட்டைத் தான் நாம் பாடவேண்டியவர்கள். சிலுவையில் முடிக்கப்பட்டவற்றை முடிந்ததாக பார்ப்பது விசுவாசம். விசுவாசம் சுகத்தைத் தேடாது. சுகத்திற்காக ஜெபிக்காது. ஆனால் சிலுவையில் சம்பாதிக்கப்பட்ட சுகத்திற்காக துதிக்கும். அந்த சுகத்தை தங்கு தடையின்றி அனுபவிக்கும்.

ஒரு சகோதரி சுகமளிக்கிற கூட்டத்திற்கு சென்றிருந் தார்கள். தேவவார்த்தை கேட்ட அந்த சகோதரிக்கு முன் கழுத்துக் கழலை என்கிற வியாதியினிமித்தம் கழுத்து வீங்கி இருந்தது. ஊழியர் ஜெபித்தார். இந்த சகோதரி விசுவாசத்தோடு சுகத்தைப்பெற்றுக் கொண்டார்கள். சாட்சி சொல்ல மேடை ஏறி, "கர்த்தர் எனக்கு கொடுத்த இந்த அற்புத சுகத்திற்காக ஸ்தோத்திரம்" என்றார்கள். அதைக் கண்ட பலர் சிரிக்க ஆரம்பித்தார்கள். காரணம் அந்த சகோதரிக்கு கழுத்தில் வீக்கம் நீங்கவே இல்லை. ஆனால் அந்த சகோதரிக்கு சுகமளிக்கிற வல்லமை பாய்ந்தவிதம் அவர்களுக்குத் தெரியும். சுகம் வந்தாயிற்று என்று தினமும் மேடையேறி சாட்சி சொன்னார்கள். பலர் சிரிப்பதைப் பார்த்து தேவனிடம், "ஆண்டவரே! நான் சுகமானது எனக்குத் தெரிகிறது. இவர்களுக்குக் காட்டும் என்றார்கள். உடனே அந்த வீக்கம் மாயமாக மறைந்தது. எல்லோரும் தேவனை மகிமைப்படுத்தினார்கள். கேலி பேசினவர்கள் விசுவாச பாடத்தைக் கற்றுக் கொண்டார்கள்.

ஆம்! காணாத சுகத்தை விசுவாசிக்க வேண்டும். விசுவாசக் கண்களால் காண வேண்டும். **விசுவாசமே சுகத்தை ஆவிக்குரிய உலகத்திலிருந்து நிஜ உலகத்திற்கு கொண்டு வந்து சேர்க்கும் பாலமாக செயல்படுகிறது.** விசுவாசியுங்கள். ஆரோக்கியத்தை சுதந்தரியுங்கள்.

**அத்தியாயம் 13**

# சுகமும் இயற்கை விதிகளும்

'சரீர உடற்பயிற்சி பலனளிக்கக் கூடியது' (1 தீமோ. 4:8)

'நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல் திராட்சரசமும் கூட்டிக்கொள்' (1தீமோ.5:23)

சுகத்திற்கான நெறிமுறைகளை வேதத்ததைவிட அதிகமாக கற்றுத்தர இன்னொரு புத்தகம் இல்லை. தேவன் தாம் நியமித்த இயற்கை விதிகளின்படி செயல்படுகிறவர். அவர் தமது விதிகளை ஒரு போதும் மாற்றமாட்டார். அவர் விதிகளுக்கு உட்படாதவர்கள், அதற்குரிய பலனை அறுத்தே ஆக வேண்டும்.

சுகத்திற்காகவும், தேவன் தந்த நெறிமுறைகளைக் கைக்கொள்ளுவது தவிர்க்க முடியாதது. சுகம் நம்மில் பூரணமாக விளங்க நேரத்திற்கு உணவு உண்பது உண்ணும் உணவை சத்துள்ளதாக உண்பது (பால், பழங்கள், முட்டை), நேரத்தோடு தூங்குவது, உடற்பயிற்சி செய்வது போன்ற பல நெறிமுறைகளை நமது பூரண சுகத்திற்காக நாம் கையாண்டே தீர வேண்டும்.

நாம் மரக்கதவுகளைத் திறக்க வேண்டும். We need to open the wood-doors, God will open the iron-doors. **நாம் செய்யக் கூடியவைகளை நாம் செய்யும் போது, நாம் செய்யக்கூடாதவைகளை தேவனே செய்வார்.**

இன்று தேவ மக்களும் ஊழியரும் உணவு உண்பதிலும், உறங்குவதிலும், உடற்பயிற்சி செய்வதிலும் தவறுகிறார்கள். எனவே பல தேவ மக்களும் ஊழியரும் வியாதியில் இருக்கிறார்கள். 25 ஆண்டுகளாக பாஸ்டராக பணிபுரியும் டாக்டர் ஒருவர் தேவ நியமனப்படி உண்டு உறங்கி, உடற்பயிற்சி செய்தால், 120 வயது வரை ஒரு தேவபிள்ளை வாழ முடியும்." என்று சவால் விடுகிறார். மார்க் விர்க்ளர் என்பவர் எழுதிய இயற்கையை நோக்கி (Go natural) என்கிற புத்தகத்தை தவறாமல் படியுங்கள்.

"என் ஜனங்கள் அறிவில்லாமையினாலே சங்காரம் ஆகிறார்கள்"

(ஓசியா 4:6) என்கிற வார்த்தைப்படி சரீரத்திற்கடுத்த இயற்கை விதிகளை அறியாததால், இன்று தேவமக்கள் கொடிய வியாதிகளுக்கு இரையாகிறார்கள்.

இயற்கைவிதிகளை அனுசரித்து சுகம் காக்க எடுக்க வேண்டிய முயற்சிகள்:

1. தினமும் காலை குறைந்தது 10 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

2. குறிப்பிட்ட நேரத்திற்கு எல்லா நேர உணவையும் உண்ண வேண்டும்.

3. குறிப்பிட்ட நேரத்திற்கு இரவில் படுக்கைக்குச் செல்ல வேண்டும்.

4. உணவு உண்பதில் அதிக அளவிலோ, குறைந்த அளவிலோ இல்லாமல் போதிய அளவு உண்ண வேண்டும். சுகத்தைக் காத்துக் கொள்ள தேவையான புத்தகங்களைப் படித்து அந்தந்த வயதிற்குத் தேவையான சத்துப்பொருட்களடங்கிய உணவை உண்ண வேண்டும். உடல் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் உணவை அருந்தக்கூடாது.

5. சரீர சுகத்தைக் கெடுக்கும் கோபம், இச்சை, மன்னிக்காத கடின இருதயம் போன்ற பாவங்களைக் களைய வேண்டும்.

6. ஆத்தும சுகத்தின் அளவே சரீர சுகம். ஆத்துமாவில் வாழ்வது போலத்தான் சரீரத்தில் வாழ முடியும். எனவே ஆத்துமாவில் பலப்பட வேத தியானம், அனுதின ஜெபம், கூட்டு ஜெபத்தை கிரமமாக கைக்கொள்ள வேண்டும்.

7. உபவாச ஜெபம் கிரமமாக செய்ய வேண்டும். உபவாச ஜெபம் சரீர சுகத்திற்கும் ஆத்தும சுகத்திற்கும் உதவும்.

8. வியாதி சரீரத்தில் இருக்கலாம் என்று அங்கீகரிக்கும் தெய்வீக சுகத்திற்கு விரோதமான எல்லாவித தவறான உபதேசங்களை விட்டு விலக வேண்டும்.

9. சுத்தம் சுகம் தரும் என்கிற முதுமொழிக்கேற்ப வீட்டின் பொருட்கள், வீட்டில் உள்ள எல்லா பகுதிகள், உடை முதலியனவற்றில் சுத்தம், தூய்மை காக்கப்படவேண்டும்.

## அத்தியாயம் 14

# தெய்வீக சுகமும் தலைமைத்துவமும்

'ஒருவன் வியாதிப்பட்டால் சபை மூப்பர்களை வரவழைப்பானாக' (யாக்5:15)

தேவன் தமது அதிகாரத்தை பகிர்ந்தளித்து ஆளுகிறவர். அவராலேயல்லாமல் ஒரு அதிகாரமும் இல்லை.(ரோ.13:1-3) ***குடும்பதலைவர்கள், சபைத்தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள்*** என்னும் மூன்று விதமான தலைமைத்துவங்கள் மூலம் இன்றும் நமது தேவனாகிய இராஜாதி இராஜா ஆளுகை செய்கிறார்.

தலைமைத்துவம் என்பது ஒரு அபிஷேகம். தலைமைத்துவத்தை எதிர்க்கிறவர்கள் தேவனையே எதிர்க்கிறார்கள். தலைமைத்துவத்தை எதிர்க்கும்போது தேவனே புண்படுவதால் பாதுகாப்பு விலகுகிறது. தலைவர்களை தேவன் வேலியாக வைத்திருக்கிறார். தலைமைத்துவத்தை எதிர்ப்பது பாதுகாப்பு எல்லையை விட்டு வெளியே போவதற்கு சமானம். எனவேதான் தலைமைத்துவத்தை எதிர்க்கிறவர்கள் உடனே சத்துருவின் பல தாக்குதலுக்கும் வியாதிக்கும் ஆளாகிறார்கள்.

இன்று பலர் வியாதிப்படக்காரணம் அவர்கள் தலைமைத துவத்தை கனம்பண்ணி அங்கீகரிக்காததுதான். தேவன் தமது ஜனத்தை பாதுகாக்கும் பொறுப்பை தாம் நியமித்த தலைவர்களிடம் ஒப்புக்கொடுத்துள்ளார். எனவேதான் "ஒருவன் வியாதிப்பட்டால், தங்கள் மூப்பர்களை வரவழைப்பானாக" என்கிற கட்டளையை தேவன் தந்துள்ளார்.

மூப்பர்களுக்கு வியாதிமேல் அதிகாரத்தையும், தமது நாமத்தின் வல்லமையையும் தேவன் தந்துள்ளார். மூப்பர்கள் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தாலே சபையின் வியாதி நீங்குகிறது. மூப்பர்களின் அதிகாரத்தை மீறி கட்டுக்கடங்காமல் சபையாரைத் தாக்க ஒரு வியாதியாலும் முடியாது. மூப்பர்களின்

உத்தரவு இல்லாமல் ஒரு வியாதியும் சபைக்குள் நுழைய முடியாது. ஆனால் மூப்பர்களை யாராவது துக்கப்படுத்தினால், அவர்கள் மனதைப் புண்படுத்தினால், கனவீனமாக நடத்தினால், சாத்தானுக்கு அவர்கள் வழி திறக்கிறார்கள் என்று அர்த்தம்.

மிரியாம் வயதில் மூத்தவளாக இருந்தும் அபிஷேகம் பண்ணப்பட்ட தலைவனாயிருந்த மோசேக்கு விரோதமாக பேசும்போது, மனஸ்தாபப்பட தவறியபடியால், குஷ்ட ரோகம் என்கிற கொடிய வியாதியால் பீடிக்கப்பட்டாள். அவள் தலைமைத் துவத்துவத்தை அசட்டை செய்தது கொடிய வியாதிக்கு வழி திறந்தது.

சிம்சோன் தன் பெற்றோரிடம் அறிவிக்காமல் வைத்த பெலிஸ்திய பெண்களின் உறவு அவனை அழிவுக்குள் நடத்தியது. தேவன் அபிஷேகம் பெற்றவர்களும், தலைமைத் துவத்திற்கு அடங்கி நடக்க விரும்புகிறார். தாய் தந்தைகளும் பிள்ளைகளுக்குத் தலைவர்கள். கணவன் மனைவிக்குத் தலைவன். அவர்களை புண்படாமல் வைத்துக்கொண்டால் அவர்கள் ஜெபத்தின் மூலம் சுகம் பெறலாம்.

தன் தகப்பன் பலியிடும்படி தன்னை கட்டைகளின் மேல் கிடத்தும் போதும் அமைதியாய் படுத்த ஈசாக்கு நூறுமடங்கு ஆசீர்வாதம் பெற்றான். அவன் விதைவிதைத்தான். நூறு மடங்கு அறுத்தான். நூற்றுக்கு நூறு சுகத்தையும் அனுபவித்தான். தலைமைத்துவத்திற்கு கீழ்ப்படிதலே சுக வாழ்விற்கு வழி..

தலைமைத்துவத்தை எதிர்த்து மடிந்தவர்கள் பலரை நான் கண்டிருக்கிறேன். உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் என்று சீஷர்களுக்கு இயேசு சொன்னதின் நோக்கமே தலைமைத்துவத்தை அங்கீகரிக்கத்தான். தலைமைத் துவத்திற்கு கீழ்படியுங்கள். தலைமைத்துவம் மூலம் வரும் சுகத்தையும், பாதுகாப்பையும் அனுபவியுங்கள்.

## அத்தியாயம் 15

# சுகமும் மன்னிப்பும்

**'அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்து தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாக மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்' என்றார்.** (மத்.18:23-35)

வியாதிக்கும், மன்னிக்காத தன்மைக்கும் உள்ள தொடர்பை கிறிஸ்து இந்த உவமையின் மூலம் கற்றுத் தருகிறார். கோடிக்கணக்கான ரூபாய் கடனிலிருந்து மன்னிப்புப் பெற்றவன் தான் சில நூறு ரூபாய் கடனாக கொடுத்தவனிடம் இரக்கமில்லாமல் நடக்கிறான். அவனை அடிக்கிறான். சிறையில் அடைக்கிறான். முடிவு சிறையிலிட்டவன் சிறையாகிறான். அடித்தவன் அடிபடுகிறான். உபாதிக்கிறவர்களால் உபாதிக்கப் பட்டான்.(V34)

ஆம்! மன்னிக்காமல் தன் கடன்காரனை அடித்த ஊழியன், உபாதிக்கிறவர்கள் கையில் ஒப்புக்கொடுக்கப்படுகிறான். உபாதிக்கிறவர்கள் யார்? அசுத்த ஆவிகள். வியாதிகள். ஆம்! மன்னிக்காதவர்கள் அபாத்திரமாய் கர்த்தர் விருந்தில் பங்கு பெறுகிறார்கள். (1கொரி.11:29,30) கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அவர் சரீர அங்கம். அப்படி அவர் சரீர அங்கத்தை மன்னிக்காமல், மதியாமல் அங்கீகரிக்காமல் இருந்தால் நாம் கிறிஸ்துவின் சரீரத்தை துண்டிக்கிறோம் வெட்டுகிறோம். எனவேதான் சரீரமாகிய ஆலயத்தை கெடுக்கிற மன்னிக்காதவர்களை தேவனே கெடுக்கும்படி ஒப்புக்கொடுக்கிறார்.

இன்று தேவதூதர் பணியை அனுபவிக்க வேண்டிய தேவமக்கள், பிசாசின் தூதர்கள் தரும் வியாதியால் அவதிப்படுவதற்கான காரணம் என்ன? அவர்களுடைய

இரக்கமில்லாத மன்னிக்காத கடின இருதயம்.

கிறிஸ்து நாம் பிறந்த நாள் முதல் இந்த நாள் வரை ஏன் நாம் மரிக்கிற நாள் வரைக்கும் செய்யும் எல்லா பாவங்களையும் மன்னித்து இருக்கிறார். மறந்தும் இருக்கிறார். நாம் மன்னிப்படைய நாம் பிறர் தவறுகளை மன்னிக்க வேண்டும்.

தேவன் பாவங்களை மூடுகிறவர். பிசாசு பாவங்களை வெளிப்படுத்துகிறவன். தேவன் பாவங்களை மன்னிக்கிறவர். பிசாசு மன்னிப்பு கொடுக்கவும், கேட்கவும் விரும்பாதவன். கிறிஸ்து நமது பாவங்களை மேகத்தைப் போல அகற்றி விட்டார். அவர் கோடிக்கணக்கான ரூபாயை மன்னிப்பது போல நமது எண்ண முடியாத பாவங்களை மன்னித்து இருக்கிறார். இப்படிப்பட்ட மன்னிப்பைப் பெற்ற நாம் நமக்கு விரோதமாக தீங்கு செய்பவர்களையும் மன்னிக்கத்தான் வேண்டும். நமக்கு விரோதமாக தீங்கிழைப்பவர்களின் தீமையானது சில நூறு ரூபாய் கடன் போலத்தான் இருக்கிறது.

எனவேதான் பரமண்டல ஜெபத்தில் “எங்கள் கடனாளிகளுக்கு மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்” (மத்.6:12) என்று இயேசு கற்றுத்தந்தார். நாம் மன்னிக்கிற அளவுதான், தேவனது மன்னிப்பு நமது வாழ்வில் பலிக்கும். நாம் மன்னிக்காததற்குக் காரணம் கடின உள்ளம்தான். அந்தக்கடினம் சாத்தான் சரக்கு. அவன் அதன் வழியாக்கி உட்பிரவேசிக்கிறான். அவன் அவர்களை வியாதியால் நிரப்புவான். உபாதிக்கிறவர் கையில் உபாதைகளை பெறுவார்கள்.

இன்றே ஒரு நாளில் ஏழு எழுபது முறை மன்னிக்கத் தீர்மானியுங்கள். (மத்.18:22) **விடுவியுங்கள். விடுதலையாக்கப்படுவீர்கள். சுகம் உங்களை நிரப்பும்.**

**அத்தியாயம் 16**

## சுகமும் தவறான உபதேசமும்

**'அந்த முள் என்னை விட்டு நீங்கும்படி நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன்' ( 2 கொரி.12:7,8)**

பவுலைக் குட்டிய சாத்தானுடைய முள் வியாதிதான் என்று ஒரு சிலர் சொல்லுகிறார்கள். அந்த முள்ளை தேவன் நீக்காததால் வியாதி தேவ சித்தம் என்று முடிவு கட்டி விட்டார்கள். பவுல் வியாதியுடையவன் என்பதற்கு வசனத்தில் ஆதாரம் இல்லை. கர்த்தருக்காக பல பாடுகள், அடிகள் பட்டதால் பெலவீனம் இருந்தது. ஆனால் அவனுக்கு வியாதி இல்லை. எனவே இதைக்கொண்டு வியாதி வரலாம் என்று கூற முடியாது.

இன்றும் ஒரு சிலர் மீகா.1:12, ஏசா.45:7 ஆகிய வசனங்களை வைத்துக் கொண்டு தேவன் தீங்காகிய வியாதியை அனுப்புகிறார் என்று உபதேசிக்கிறார்கள். தேவன் வியாதியை அனுப்புகிறவர் அல்ல. தேவ மக்கள் தேவனுக்கு கீழ்படியாமல் பாதுகாப்பு எல்லையைக் கடக்கும் போது தேவன் தீமையை அனுமதிக்கிறார். எனவே வியாதியை தேவன் அனுப்புகிறார் என்கிற உபதேசத்திற்கு விலக வேண்டும்.

3. இன்றும் ஒரு சிலர் ஏசா.45:15; சங்.39:5 ; சங்.90:10 ஆகிய வசனங்களை மேற்கோள் காட்டி மனிதனுடைய ஆயுள் 70 அல்லது 80 என்கிறார்கள். கோபத்தின் நாட்களிலே, தேவன் சொன்ன வார்த்தைகள் இவைகள். இப்பொழுது புதிய ஏற்பாட்டிலே தேவன் தமது கோபத்தை விலக்கி, கிருபையைக் காட்டுகிறார். சபையை மணவாட்டியாகப் பார்க்கிறார். நீண்ட ஆயுளை தம் ஜனத்திற்கு சொத்தாகத் தருகிறார். எனவே வியாதிப்பட்டுக் குறை ஆயுளில் மரிப்பது தேவ சித்தமல்ல. குறை ஆயுள் தேவசித்தம் என்கிற உபதேசத்தை ஏற்கத்

தேவையில்லை. குறை ஆயுளில் மரித்த ஒரு சில ஊழியரின் அனுபவங்களை பொதுவான(exceptions) நெறிமுறையாக மாற்ற முடியாது.

4. துரோப்பீமுவின் வியாதியையும் மேற்கோள் காட்டி வியாதி தேவ சித்தமென சிலர் உபதேசிக்கிறார்கள். (2 தீமோ.4:20) ஊழியத்தில் போர் முனையில் தியாகமாக உழைக்கும்போது சுகத்தை, சுய விருப்பத்தை ஆண்டவருக்காக தியாகமாக ஒரு சிலர் ஊற்றி விடுகிறார்கள். துரோப்பீமு போல ஊழிய களத்தில் போர் புரியும்போது பலியாடாகும் ஒரு சிலர் உண்டு. அதையும் பொதுவான உபதேசமாக மாற்றமுடியாது.

5. இன்னும் ஒரு சிலர் யோ.9:32 மேற்கோள் காட்டி வியாதி தேவமகிமைக்காக வரும் என்கிறார்கள். இங்கே இந்த வியாதி சுகமாகும்போது வெளிப்படும் தேவமகிமையைத் தான் குறிப்பிடுகிறார். தேவன் வியாதிகளை குணமாக்கும் போது ஒரு சிலரை ஒரு சில ஊழியர் மூலம் குணமாக்க வேண்டுமென்று முன்குறிக்கிறார். உதாரணமாக, இந்த பிறவிக் குருடனை கிறிஸ்து குணமாக்கி குருடனை குணமாக்க முடியும் என்பதை வெளிப்படுத்த சித்தம் வைத்திருந்தார். கிறிஸ்து அதை தேவ சித்தப்படி நிறைவேற்றினார்.

ஆனால் 40 வயது சென்றதும் பேதுருவால் யோவானால் குணமாக்கப்பட்டு நடந்த முடவன் இயேசுவின் நாட்களிலும் தேவாலயத்தில் இருந்திருப்பான். ஆனால் இயேசுவுக்கு அவன் பேதுருவால், யோவானால் எழுப்பப்பட வேண்டியவன் என்பது தெரிந்திருந்தது. எனவே அவர் அவனை எழுப்பவில்லை. இப்படி ஒரு சிலர் சுகம் பெறுவதில் ஒரு சில தாமதங்கள் உண்டாகலாம். அதை வைத்துக் கொண்டு வியாதி தேவ மகிமைக்காக என்று உபதேசிக்க முடியாது.

6. இன்றும் ஒரு சிலர், சுகம் தேவ சித்தமல்ல என்று உபதேசிக்கிறார்கள். ஐந்தாவது அத்தியாயத்தில் இதற்குரிய விளக்கத்தைக் காணலாம்.

7. இன்றும் ஒரு சிலர் எபி.12:6 ஐ காட்டி தேவன் சிட்சிக்கிறவர். அவர் தம் பிள்ளைகளைத் திருத்துவதற்காக வியாதி கொடுக்கிறார் என்று உபதேசிக்கிறார்கள். ஒரு பிள்ளையைத் திருத்தும் எந்த தகப்பனும் வியாதிக் கிருமிகளைக் கொடுத்துத் திருத்தமாட்டான். அது போல வியாதியை சிட்சையாக ஒரு போதும் தேவன் பயன் படுத்துவதில்லை.

இப்படி வசனங்களினாலே மேற்கோள் காட்டி சபையை சாத்தான் வியாதியில் இருக்கும்படி செய்துவிட்டான். தேவ ஜனமும் தாவீது அண்ணன்மார் போல கோலியாத் எனும் வியாதியின் சவாலுக்கு பயந்து அடிபணிந்து விட்டார்கள். வியாதியை எதிர்த்து அழிக்க எழும்பும் வைராக்கியம் தைரியத்தை சபை இழந்திருக்கிறது.

இப்பொழுது நமது தாவீதின் குமாரன் இயேசு கோலியாத் எனும் வியாதியை சிலுவையிலே அழித்துவிட்டார். மற்ற கோலியாத்தின் சேனையாகிய வியாதிகளின் விடப்பட்ட வல்லமையை இஸ்ரவேலர் ஓடி துரத்தியது போல, தேவ மக்களாகிய நாம் துரத்த வேண்டும். **தாவீது விட்டதை இஸ்ரவேலர் தொடர்ந்தது போல, இயேசு விட்டுச் சென்ற சுகமளிக்கிற ஊழியத்தை நாம் தொடர வேண்டும்.**

**தேவ பிள்ளையே! எழும்பு! சுகமளிக்கிற ஊழியத்தை தொடர எழும்பு! இதுவே உன் நேரம்.**

அத்தியாயம் 17

## சுகமும் தேவ வார்த்தையும்

'தேவன் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்குகிறார்.' (சங். 107:20)

"ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே, உம் வார்த்தையிலே சுகம், உம் வார்த்தையிலே மதுரம், உம் வார்த்தையிலே எல்லாம் சந்தோஷம்" என்று பக்தன் பாடுவது போல தேவன் ஒரு வார்த்தை சொன்னால் கூட அந்த வார்த்தையிலே சுகமுண்டு. நூற்றுக்கு அதிபதியும் இயேசுவின் அதிகாரத்தை அறிந்தவனாக சொன்ன வார்த்தையும் மத்.8:8 "ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும்" என்பதுதான். ஒரு வார்த்தையிலேயே சுகம் என்றால் சுகத்திற்காக தேவன் வேதத்திலே எத்தனை வார்த்தைகளை தம் பக்தன் மூலம் எழுதி வைத்திருக்கிறார்.

அந்த வார்த்தைகள் எழுதப்பட்ட(LOGOS) வார்த்தையாக இருக்கிறது. அது அறிவளவில் கிரியை செய்யும் வார்த்தை. அது அனுபவமாகத் தேவையில்லை. ஆனால் நாம் சுகம் வேண்டுமென சுகத்துக்கடுத்த வசனங்களை படிக்கும்போது தேவனே நேரில் நின்று பேசுவது போல, ரேமா எனும் வெளிப்பாட்டு வார்த்தை புறப்படும். அந்த வார்த்தைதான் சுகத்தை கொண்டு வரமுடியும்.

கென்னத் கேஹின் எனும் பக்தர் பல ஆண்டுகளாக வியாதிப்படுக்கையில் இருந்தார். மரண தருவாயில் அவர் இருக்கும்போது, "நீ இந்த மலையைப் பார்த்து பேசினால்" என்கிற மாற்கு 11:21 வசனம் வெளிப்பாடாக வந்தது. அவரும் குணமானார். அவர் ஊழியத்தின் மூலம் ஆயிரங்கள் சுகத்தைப் பெறுகிறார்கள்.

வசனம் உன் நாபிக்கு ஆரோக்கியம், எலும்புக்கு ஊன். (நீதி. 3:1-8) மன்னா உண்டவர்கள். பெலவீனப்படவே இல்லை. (சங்.105:37) அதுபோல **இரவும் பகலும் வசன தியானத்தில்**

**இருப்பவர்கள் சரீரத்திலும் எல்லாவற்றிலும் செழிப்பார்கள்.** (சங்.1:1-3) அவர்கள் செய்வதெல்லாம் வாய்க்கும். தீர்க்கதரிசிகள் காலத்தில் தேவன் தமது வார்த்தையை தீர்க்கதரிசிகள் மூலம் அனுப்பினார். எசேக்கியா வியாதியாய் இருந்த போது அழுது ஜெபித்தான். (ஏசா.38:4) அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசி மூலம் "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன்" என்று வார்த்தையை அனுப்பி ஆயுசு நாட்களைக் கூட்டினார். அதற்கு ஒரு அடையாளத்தைக் காட்டினார்.

ஆம்! தேவன் தமது வார்த்தையை அனுப்பி குணமாக்குகிறவர். இன்றும் சுகமளிக்கிற கூட்டங்களில் ரேமா வார்த்தைகள் பிரசங்கிக்கப்படும்போது கர்த்தர் நேரில் நின்று பேசுவது போல ஆயிரங்கள் குணமாகிறார்கள். இன்றைக்கு தேவனுக்கு வாயாக இருந்து தேவ வார்த்தையை சொல்லி, ஜனங்களின் விசுவாசத்தை தட்டி எழுப்பி, ஆயிரங்களை சுகமாக்கும் பாத்திரங்கள் தேவை. தேவ வார்த்தையை வெளிப்படுத்தும் பாத்திரமாக மாறுவீர்களா?

இலங்கையில் சக்கர நாற்காலியில் பல ஆண்டுகளாக நடக்க முடியாமல் இருந்த சகோதரிக்கு தேவ வார்த்தை உண்டாயிற்று. ஒரு நாள் இரட்சகர் இயேசுவே தோன்றி ஒரு குறிப்பிட்ட நாளைச் சொல்லி, "அந்நாளில் நீ நடப்பாய்" என்றார். அந்த நாள் வந்தது. இயேசு மறுபடியும் வந்தார். "எழும்பி நட" என்கிற வார்த்தை வெளிப்பட்டது. அந்த சகோதரி எழும்பி நடந்தார்கள். அவர்களது அனுபவ சாட்சி இன்று புத்தகமாகவும், வீடியோவிலும் வந்து ஆயிரங்களை ஆசீர்வதிக்கிறது.

இதை விசுவாசிக்கும் போது உங்களில் யாராவது வியாதியில் இருந்தால், தேவ வெளிப்பாட்டு வார்த்தையைப் பெறுங்கள். தெய்வீக சுகத்தை சொந்தமாக்குங்கள். காரணம் வெளிப்பாட்டு வார்த்தையே சுகமளிக்கிற விசுவாசத்தைத் தரும். வியாதியில் கஷ்டப்படுபவர்கள் கர்த்தருடைய வசனத்தில் உள்ள குணமாக்கும் அற்புதங்களை நாள்தோறும் படியுங்கள். தியானியுங்கள். சுகத்தை சொந்தமாக்குங்கள்.

அத்தியாயம் 18

# சுகக்கடத்திகள்

**'வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அவர்கள் சொஸ்தமாவார்கள்.'** (மாற்.16:18)

தேவன் தமது சுகத்தை தம் ஜனத்திற்குள் பொக்கிஷமாக வைத்துஇருக்கிறார். தேவ பிள்ளை ஒவ்வொருவரும் ஒரு (power house) பவர் ஹவுஸ்தான். இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டவுடன் சுகமளிக்கும் வல்லமை கசிந்தது போல இன்றும் அவர் அங்கமாகிய தேவ பிள்ளைகளைத் தொட்டாலும் சுகமளிக்கும் வல்லமை வெளிப்படும். அவர்கள் பிறர் மேல் கைகளை வைத்தாலும் சுகமளிக்கும் வல்லமை பாய்ந்து செல்லும்.

கைகளை வைத்தல் மூலமும், மூப்பர்கள் எண்ணெய் பூசுதல் (யாக்.5:14,15) மூலமும் (அப்.19:11,12) அபிஷேகம் நிறைந்த மனிதர்களின் வஸ்திரம், உருமால், கச்சை,மூலமாகவும் சுகமளிக்கும் வல்லமை பாய்ந்து சென்றது குறித்து வேதம் ஆதாரத்துடன் நம்முடன் பேசுகிறது. விசுவாசித்தால் கர்த்தர் தமது சுகமளிக்கும் வல்லமையை நமது கைகள் மூலமும், நம் கையில் இருக்கும் எந்த பொருள் மூலமும் கடத்த முடியும்.

சுகமளிக்கும் வல்லமை என்பது ஒரு அபிஷேகம். இந்த அபிஷேகம் பிற வல்லமையால் பாதிக்கப்படாமல் கடத்தப் படக்கூடியது. **தேவன் தமது வல்லமையை சேமித்து வைக்கும் Power House ஆக நமது உள்ளான மனுஷனையும் கடத்தி விடும் கடத்தியாகவும் நமது கைகளைப் பயன்படுத்துகிறார்.** நமது கைகள் வைக்கப்படும் எந்த பொருளிலும், நபரிலும் அந்த வல்லமை கடந்து போகிறது. நாம் விசுவாசத்துடன் கை வைத்த பொருட்களைத் தொட்டும் எந்த வியாதிக்காரரும் குணமாக முடியும்.

இன்று மருந்துகள், மருத்துவர்கள் பெருகிவிட்டார்கள். காரணம், வியாதிக்காரர்கள் பெருகி விட்டார்கள். தேவன் சுகமளிக்கிற ஊழியத்தை ஒரு குதிரைக் கொம்பாக்கவில்லை. அவர் அவ்வூழியத்தை நிறைவேற்றும்படி செய்யச் சொன்ன படிகள் இரண்டுதான். ஒன்று இயேசுவின் நாமத்தை பயன்படுத்துவது. இரண்டாவது கைகளை வைப்பது. இவ்வளவுதான். நாம் கைகளை நபர் மீது வைத்தால் நபர்கள் மீது சுகமளிக்கும் வல்லமை விளங்கும். எண்ணெய், ஆடைகள் மற்றும் பொருட்கள் மீது வைத்தால் சுகமளிக்கும் வல்லமை பொருட்கள் மீது இறங்கும்.

கிறிஸ்து சுகமளிக்கிற வல்லமையுள்ள சுகமாக்கும் தழும்புகள் உடையவராக, உயிர்த்தெழுந்தவராக நமக்குள் இருக்கிறார். சுகமளிக்கிற ஆவியானவரும் நமக்குள் இருக்கிறார். யெகோவாராபாவாகிய பரிகாரியும் நமக்குள் இருக்கிறார். நாம் நமது கைகளை வைக்கும் போது (அவரது பிரதிநிதிகளாக, அவரது கட்டளைக்குக் கீழ்படிகிறவர்களாக) திரியேக தெய்வமும் எழும்பி கை வைக்கிறார். **ஒரு தேவபிள்ளையின் கையும், தேவனின் கையும் ஒரு வியாதியஸ்தர் மேல் படும்போது, அந்த வியாதி மறையாமல் போக முடியவே முடியாது.**

எனவே தேவ பிள்ளையே! உனக்குள் இருக்கும். ஊற்றாகிய சுகமளிக்கிற வல்லமையை பயன்படுத்தாமல் விட்டுவிடாதே! நீ பற்பல வியாதிகளை போக்க சுகமளிக்கிற வரத்தைப் பயன்படுத் தலாம். அற்புத அடையாளம் செய்யும் சக்தியாகிய வரத்தைப் பயன்படுத்தலாம். மன்றாடி ஜெபித்து சுகமளிக்கிற வல்லமையை வெளிப்படுத்தலாம். எப்படியோ உனக்குள் இருக்கும் சமுத்திரம் போன்ற சுகமளிக்கிற வல்லமை இலட்சங்களை சுகமாக்கட்டும்.

உங்களையும், உங்கள் உடைமைகளையும் அவரது சுகம ளிக்கிற வல்லமைக்கு கடத்திகளாக ஒப்புக்கொடுங்கள். வெகு விரைவில் பெருங்கூட்ட ஆத்தும அறுவடையைக் காணமுடியும்.

**அத்தியாயம் 19**

## சுகமும் மன்றாட்டு ஜெபமும்

**'... அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். நீங்கள் சொஸ்தமடையும்படி ... ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்'** (யாக். 5:14-16)

தேவன் தமது அனந்த அளவில்லாத ஞானத்தில் நெறிமுறைகளில் செயல்படுகிறவர். அவர் ஜெபத்தையும், பாவ அறிக்கையையும், ஒருவருக்காக ஒருவர் ஜெபிப்பதையும், சபையில் சுகம் வெளிப்படுவதற்கு கைக் கொள்ள வேண்டிய நெறியாகவும், விதிமுறையாகவும் தந்துள்ளார்.

மன்றாட்டு ஜெபத்தின் மேன்மையை விளக்குவதற்கு எலியாவை உதாரணமாக யாக்கோபு காட்டுகிறார். எலியா பிரசவ வேதனைப்படுவது போல மழைக்காக ஜெபித்தார். தேசத்தின் தேவையைத் தமதாக்கினார். மன்றாட்டு ஜெபம் என்றால் "பிறர் தேவையை, தமது தேவையாக பாவித்து ஜெபிப்பது" வியாதியில் இருக்கும் பிறரது வேதனையை உணர்ந்து அவருக்காக பாரத்தோடு மன்றாடும்போது சுகம் வெளிப்படுகிறது.

***கிறிஸ்து சிறந்த மன்றாட்டு வீரர். அவரது மாதிரியை நாம் பின்பற்ற விரும்புகிறார்.*** ஆவியானவர் நமது மன்றாட்டு ஜெப பெலவீனங்களில் உதவி செய்கிறவர். வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு வியாதியில் இருப்போருக்காக ஜெபிக்க வைக்க ஆவியானவர் ஆயத்தம் நீங்கள் ஆயத்தமா?

அதோடு ஒரு சபையிலோ, ஒரு குடும்பத்திலோ, வியாதி அதிகரித்தால், ஒருவருக்கொருவர் குற்றங்களை அறிக்கையிட்டு ஜெபிக்க வேண்டும். இன்று தேவனிடம் மன்னிப்பு கேட்பது எளிது. பிறரை மன்னிப்பதும் எளிதாக இருக்கலாம். குற்றங்களை வெளிப்படையாக சொல்லி அறிக்கையிடுவதும், மன்னிப்பு கேட்பதும் ஒரு முதிர்ந்த தேவ பிள்ளையின் அடையாளம்.

அப்படிப்பட்டவர்கள்தான் மன்றாட்டு ஜெபவீரராக இருக்க முடியும். பிறரையும் தங்களையும் எல்லா வியாதிகளினின்றும் சுகப்படுத்திக் கொள்ள முடியும்.

தேவமக்களுக்கு தேவன் தந்த அழைப்பில் பிரதான அழைப்பு ஆசாரிய அழைப்பு (1பேது.2:7-9; வெளி.1:5) அழைக்கப்பட்ட ஆசாரிய ஊழியத்தை தேவனை ஆராதித்தும், பிறருக்காக மன்றாடியும் நிறைவேற்ற வேண்டும்.

குறிப்பாக சுகம் வேண்டுமென்றால் சுகவீனமாக இருப்பவர்களுக்கு மன்றாடி ஜெபித்தால் சுகம் வரும். யோபு வியாதியிலும், கஷ்டத்திலும், நஷ்டத்திலும் இருந்தான். அவன்தன் நண்பர்களுக்காக விண்ணப்பம் செய்தான். அவன் சிறையிருப்பை தேவன் மாற்றினார். (யோபு.42:10)

இன்று வியாதியால் மருத்துவமனைகளில் அவதியுறும் கோடிக்கணக்கான ஜனங்கள் உண்டு. வியாதியில் இருப்போருக்காக மன்றாடி ஜெபிக்க வாரத்தில் ஒரு நாளை நியமித்து குறைந்தது அரை மணிநேரம் அல்லது 1 மணி நேரம் மன்றாடினால் நலமாகும். “ஆ என் தலை தண்ணீரும் என் கண்கள் கண்ணீருற்றுமானால் நலமாயிருக்கும்.

சீயோன் குமாரத்தி இன்றும் குணமாகவில்லை. வியாதியில் இருக்கும் எத்தனை ஊழியர்கள், எத்தனை தேவ மக்கள் உண்டு?

சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவர்கள் பாக்கியவான்கள். வியாதியில் சிறுமைப்பட்டவர்கள் மேல் சிந்தை வைத்து மன்றாடினால் கர்த்தர் அவ்விதம் மன்றாடுகிறவர்களை தாங்குவார். அவன் வியாதி நேரங்களில் அவன் படுக்கையை தேவன் மாற்றுவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.

“நான் வியாதியாய் இருந்தேன். என்னைக் காணவந்தீர்கள்” என் எஜமானின் சந்தோஷத்திற்குள் பிரவேசியுங்கள். என்கிற வார்த்தையோடு பரலோகத்திற்குள் பிரவேசிக்க, மருத்துவமனை ஊழியங்களையும், வியாதிக்காரருக்காக மன்றாடுவதையும் நமது வாழ்க்கை பாணியாக்குவோம்.

**அத்தியாயம் 20**

## சுகமும் இயேசுவின் இரத்தமும்

**ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால்... அவனை மேற்கொண்டார்கள்** (வெளி.12:11)

"இரத்தத்தில் உயிர் இருக்கிறது" இரத்தம் சுத்தமானால் சுகம், இரத்தம் அசுத்தமானால் வியாதி. மனுஷனுடைய பாவ வீழ்ச்சிக்குப் பிறகு அவன் இரத்தமே பாவ இரத்தமானது. இரத்தத்தில் உள்ள வெள்ளையணுக்கள் தான் வியாதிகளை எதிர்த்துப் போராட வேண்டும்.

தாய் இரத்தத்தில் உருவாகிற மனுஷன், தாயின் சுபாவத்தோடு உலகில் வருகிறான். ஆனால் இயேசு இரத்தத்தால் கழுவப்படும்போது, அவன் சுபாவமும் மாறுகிறது. அவன் வியாதியும் மறைகிறது. நோயின் வேர் பாவமாய் இருக்கிறபடியால், நோயை வேரோடு அழிக்க ஒரே ஒரு வழி ஆட்டுக்குட்டி யானவருடைய இரத்தம்தான்.

நோய்க்கிருமிகளை அழிக்க ultra-sound rays போன்ற ஒளிக்கதிர்களைப் பயன்படுத்துகிறார்கள். மருந்துகளைப் பயன்படுத்துகிறார்கள். **மருந்துகளின் வல்லமையை விட ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் உள்ள வல்லமை, எத்தனையோ மடங்கு அதிகம்**.

பஸ்கா போன்ற பண்டிகையை ஆசரிக்க இஸ்ரவேலருக்கு யெகோவா தேவன் கொடுத்ததன் நோக்கமே, சங்கார தூதனிடம் இருந்து தப்பித்துக்கொள்வதற்காகத்தான். எல்லா பாழ்க் கடிப்புகளிலும் கொடிய பாழ்க்கடிப்பும், வாதையும், வந்த நேரம் எகிப்தின் மேல் தேவன் சங்காரக்காரனை அனுப்பின நேரம்தான். பல வாதைகள், பல வேதனைகள், பல மரணங்கள். உலகத்தின் சகல வலி வேதனைகள், வியாதிகள் எகிப்தின் தெய்வங்கள் மேலும் மக்கள் மேலும் கட்டவிழ்க்கப்பட்டது. ஆனால்

இஸ்ரவேலரோடு நூற்றுக்கு நூறு காக்கப்பட்டார்கள். அவர்களைக் காத்தது எது? பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம்தான். எவர் எவருடைய வீட்டின் நிலைக்கால்களில் இரத்தம் தெளிக்கப் பட்டதோ, அவர்கள் வீட்டுக்குள் சங்காரக்காரன் நுழைய முடியவில்லை. வியாதி, வேதனைக்கு தடைச்சட்டம் இரத்தத்தால் மட்டும் போட முடியும்.

ஆட்டுக்குட்டியானவரின் இரத்தம் பிதாவின் கோபத்தை நீக்கி, பிதாவின் கோபத்தால் தன் பிள்ளையாக வந்த எல்லா சாப ரோகங்களை நீக்குகிறது. பிதாவை அருகில் கொண்டு வந்து பூரண சுகம் தருகிறது.

அது மட்டுமல்லாது சாத்தானின் கோபத்தாலும், எரிச்சலாலும் உண்டாகிற வியாதிகளை கிறிஸ்துவின் இரத்தம் மேற்கொள்கிறது. ஒரு வியாதியும், ஒருக்காலும் சேதப்படுத்தாத பாதுகாப்பு இரத்தத்தில் உண்டு. **குண்டு துளைக்க முடியாத கார் தரும் பாதுகாப்பைவிட மேலான பாதுகாப்பை கிறிஸ்து இரத்தம் ஒவ்வொரு தேவபிள்ளைக்கும் தருகிறது.**

மேலும் இரத்தம் தேவபிரசன்னத்தை நம்மில் தங்கச் செய்கிறது. தேவ பிரசன்னத்தில் “மன்னா” கெட்டுப்போகவே இல்லை. நம்மேல் தெளிக்கப்பட்ட இயேசுவின் இரத்தம் நம்மை தேவ பிரசன்னத்தில் தங்க வைத்து, புது பெலனையும், புது தெம்பையும், புது பொலிவையும் அருளுகிறது. தேவ பிரசன் னத்தில் கிறிஸ்துவின் இரத்தம் சுகமளிக்கும் தூதரையும் செயல்பட வைக்கிறது.

இயேசு இரத்தத்தால் வியாதி மறைவது மட்டுமல்ல, வியாதி நுழையாத வல்லமை கிடைக்கிறது. கிறிஸ்து இரத்தம் disease-proof ஆக (வியாதி நுழைய இயலாத தடுப்பு) செயல்படுகிறது.

இயேசுவின் இரத்தம் ஜீவனைத் தந்து, நித்தியமானதும், நிரந்தரமானதுமான சுகத்தை நமதாக்குகிறது. இரத்தம் இன்றும் நமது பாவங்களுக்காக பரிந்து பேசி நம்மேல் வர இருக்கிற வியாதிகளைத் தூரப்படுத்துகிறது.

**அத்தியாயம் 21**

## சுகமும் கர்த்தரின் நாமமும்

**'கர்த்தரின் நாமம் பலத்த துருகம், நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்'** (நீதி.18:18)

பண்டைய நாட்களிலே சத்துருக்கள் ஏறிவரமுடியாத உயரமான மறைவிடங்களை இராஜாக்கள் தங்கள் அரண்மனையிலேயே கட்டி வைத்திருந்தார்கள். அதற்குப் பெயர்தான் துருகம் (High Tower). மறு வார்த்தையில் உயரமான பாதுகாப்பு கோபுரம் எனலாம். கர்த்தர் நாமம் எல்லா நாமங்களுக்கும் மேலான நாமம். அவரது பாதுகாப்பின் சிறப்பு எவருக்கும் எட்டாத உயரத்தில் மறைவாக ஒளித்து பாதுகாக்கும் சிறப்பாகும்.

அவர் நாமத்தை தஞ்சமாகக் கொண்டவர்களை ஒரு சேதமும் அணுகாது. எந்த தீங்கும் தீண்டாது. அவர் நாமம் வியாதிகள் தாக்க முடியாத கோட்டை. வியாதிக் கிருமிகளாகிய அம்புகள் அவர் நாமமாகிய கோட்டையை துளைத்து உள்ளே வரமுடியாது.

நாம் அவர் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்கள். கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவின் நாமம் வானிலும் பூவிலும் மேலான நாமம். பேய் நடுங்கும் நாமம். நோய் வணங்கும் நாமம். அற்புத நாமம். அடைக்கல நாமம். அதற்குள் ஓடி தங்கியிருக்கும் தேவ பிள்ளைக்கு நோய் தாக்க முடியாத Guarentee உறுதி இருக்கிறது.

கர்த்தர் நாமத்தில் கர்த்தரே, இருக்கிறார். கர்த்தரைச் சூழ அவர் தூதர்கள் இருக்கிறார்கள். எப்படி ஒரு பிரதம

மந்திரி வீட்டைச் சூழ 20 வட்ட போலீஸ் பாதுகாப்பு இருப்பதால், திருடர்களோ, தீங்கிழைப்பவர்களோ உள்ளே போக முடியாதோ, அதே போல பல வட்ட கோட்டை போன்ற தேவ தூதர் பாதுகாப்பை மீறி வியாதிக்கிருமிகள், வியாதியைக் கொடுக்கும் குட்டி சாத்தான்கள் ஒரு தேவபிள்ளையின் சரீரத்தை தொடவே முடியாது.

விக்கிள்ஸ்வொர்த், ஒரு மரண படுக்கையில் எலும்பும் தோலுமாக இருந்த சகோதரனைக் குணமாக்க விசுவாசத்துடன் சென்றார். உடன் சென்றவர்களை தொடர்ந்து "இயேசு, இயேசு, இயேசு" என்று சொல்லச் சொன்னார். இயேசு நாமத்தின் வல்லமை வெளிப்பட்டது. இந்த இடம் தேவ மகிமையால் நிறைந்தது. இந்த வியாதிப்பட்ட மனுஷனை யாராலும் பார்க்க இயலவில்லை. ஆனால் அவன் ஓடிக்கொண்டே மகிமை நிறை பிரசன்னத்திற்குள் இருந்தானாம்.

பூரண சுகத்தோடு நீண்ட ஆயுளோடு வாழ்ந்தானாம். கர்த்தர் நாமம் வியாதியை அழிக்கிறது. சுகத்தால் நிறைக்கிறது. வியாதி வராத பாதுகாப்பை தருகிறது.

**அத்தியாயம் 22**

## ஆரோக்கியமும் ஆனந்தமும்

'மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம் (நீதி.17:22)

மனமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் சுகத்திற்கு அஸ்திபாரம். அகத்தின் அழகுதான் முகத்தில் தெரியும். உள்ளான மகிழ்ச்சிதான் வெளியான சுகத்தின் இரகசியம். மனமுறிவு எவராலும் தாங்க முடியாதது. அதுதான் வியாதி. நமக்குள் பிரவேசிக்கவும், சாத்தான் பிரவேசிக்கவும் வழி. முறுமுறுக்கிற உள்ளம் மகிழாது. மகிழ்கிற உள்ளம் முறுமுறுக்காது. துதிக்கிற உள்ளம், மகிழ்கிற உள்ளம். நன்றி செலுத்துகிற உள்ளம் மகிழ்கிற உள்ளம்.

முறுமுறுப்பு மனபாரத்திற்குள் நடத்தும். நன்றி, துதி நம்மை மனமகிழ்ச்சிக்குள் நடத்தும். சாத்தான் இல்லாததைக் காட்டி ஏங்க வைப்பான். தேவன் இருக்கிறதைக் காட்டி துதிக்க வைப்பார். இருக்கிறதற்காக துதித்தால் இல்லாததும் வந்துவிடும். ஆவியானவர் நம்மேல் வந்ததின் நோக்கம் துக்க உடையைக் களைந்து, ஆனந்த தைலத்தால் நிரப்புவதற்காகத்தான்.

ஆவியானவர் அனுதினமும் ஆனந்ததைலத்தால் நம்மை அபிஷேகிக்க ஆயத்தம். நாம் தினமும் முறுமுறுப்பைக் களைந்து விட்டு நன்றி, துதியால் நிறைந்தால், ஆனந்த தைலத்தால் தினமும் அபிஷேகிக்கப்படுவோம்.

நாம் மகிழ்ந்திருந்தால் நமக்குள் இருக்கும் தேவன் மகிழ்ச்சியாய் இருப்பார். **அவர் மகிழ்ந்திருந்தால், அவர் நன்மைகள் எல்லாம் நமக்குள் எழும்பும்**. மகிழ்ச்சியும், சுகமும் எழும்பும். குறைவில்லாத சுகத்துடன் நிறைவாய்

வாழ வழி மனமகிழ்ச்சிதான். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்." சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். சுகமான சரீரம் இருந்தால்தான் வாழ்வில் சாதனை புரிய முடியும். If health is lost, we loose something great in life. சுகமே ஆவிக்குரிய வாழ்விற்கும், குடும்ப வாழ்விற்கும், சமுதாய வாழ்விற்கும் ஆதாரமாக இருப்பதால், அதை எனக்குத் தரும் மனமகிழ்ச்சியை நான் விடமாட்டேன்.

நாங்கள் நடத்தும் பெராக்கா தீர்க்கதரிசன பயிற்சி முகாமில் அண்ணன் எசேக்கியா, "மனமகிழ்ச்சி நல்ல மருந்துங்க" என்று ஒரு புதுப்பாட்டைப் பாடினார். நாங்கள் பல மணிநேரம் கர்த்தரை ஆராதித்தோம். அப்பொழுது தேவபிரசன்னம் அந்த இடத்தை நிறைத்தது. மனமகிழ்ச்சி எல்லாரையும் நிறைத்தது. ஜெபிக்காமலேயே அநேகர் அற்புத சுகம் பெற்றார்கள். கட்டிகள் மறைந்தது. பல கொடிய நோய்கள் நீங்கியது. மனமகிழ்ச்சி பல நோய்களை நீக்கி அற்புத சுகத்தைக் கொடுத்தது.

**அத்தியாயம் 23**

## சுகத்தைப் பெறுவது எப்படி?

பரலோக பிரஜையான உங்களுக்கு பரலோக சொத்தான சுகத்தின் மேல் பிறப்புரிமை இருக்கிறது. "Healing is your birth right" முதலாவது சுகத்தைப்பெற உங்கள் பிறப்புரிமையை அறிந்து உரிமை பாராட்ட வேண்டும். மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும் பரலோக பிரஜைகளாய் இருப்பதால் சுகம் அவர்களது சொத்தும் சுதந்திரமுமாகும்.

இரண்டாவதாக, பிறர் விசுவாசத்தின் மேல் சாராமல் உங்கள் விசுவாசத்தையே சுகத்திற்கு பயன்படுத்தினால் சுகம் உங்கள் நிரந்தர சொத்தாகும். ரோ.12:4 -ன்படி அவனவனுக்கு தேவன் விசுவாசத்தை பகிர்ந்து கொடுத்திருக்கிறார். **உங்களுக்கு தேவன் பகிர்ந்து கொடுத்த விசுவாசம் உங்களுக்குள்தான் இருக்கிறது. அதை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.**

மூன்றாவதாக, சுகம் சொந்தமாவதைத் தடுக்க தடைகள் வரலாம். அந்த தடைகளை அகற்றுங்கள். உங்கள் (மாற். 11:21,22)அறிவில்லாமை, உங்கள் பயம், சந்தேகம், பெருமை, பாரம்பரியம், மன்னிக்காத கடின இருதயம் உங்கள் அற்புத சுகத்திற்கு தடையாக வரலாம். சோர்வு வரலாம். அவைகளையெல்லாம் கடிந்து அகற்றுங்கள்.

நான்காவதாக, உங்கள் குறைகளை அறிக்கையிட்டு தேவன் உங்களை சுத்தகரிக்க அனுமதியுங்கள். (யாக்.5:16) சுத்திகரிக்கப்பட்ட பாத்திரம் சுகம் நிறைந்த பாத்திரம்.

ஐந்தாவதாக, அவர் கேட்டவுடனே கொடுக்கிற வராகையால் (மாற்கு.11:23) கேட்டவுடனே பெற்றுக் கொண்டோம் என்று நன்றி செலுத்துங்கள். சுதந்தரியுங்கள்.

ஆறாவதாக, அவரைக்குறித்த தவறான படத்தை அகற்றுங்கள். எந்த உணர்ச்சயும் சாராதிருங்கள். வாக்குகளை அறிக்கையிடுங்கள். சுகம் உங்களுடையதே. நீங்கள் ஜெபித்தபின்பும் வியாதி விலகவில்லை. வலி இருக்கிறது என்று வியாதியின் அறிகுறிகள் சொல்லலாம். **தேவன் சொல்லுவதை விசுவாசித்து உணர்ச்சிகளின் சத்தத்திற்கு செவி சாய்க்காதிருங்கள்.**

ஏழாவதாக, ஆராதியுங்கள். ஆராதனையில் தேவபிரசன்னம் இறங்கும். அவர் பிரசன்னத்தில் பர்வதங்கள் மெழுகு போல உருகும்.

பாப் நியூகினியா நாட்டில் அதிகமாக பல மணிநேரம் ஆராதிக்கிற சபையில் ஆராதிக்கும்போதே, ஜெபமின்றி ஜனங்கள் கேன்சரிலிருந்து, பல வியாதிகளினின்றும் சுகம் பெறுகிறார்கள். அதுபோல ஆராதிப்போம். ஆரோக்கியம் அடைவோம்.

“சுகம் என் பிறப்புரிமை” என்று நாள்தோறும் அறிக்கையிடுங்கள். வியாதியை பிசாசின் சரக்காக வைராக்கியத்தோடு பார்ப்போம். வியாதிகளை அழிக்கும் போரில் தேவ ராஜ்யத்துடன் நாமும் இணைவோம். மாபெரும் ஜெயம் காண்போம்.

**அத்தியாயம் 24**

# உள்ளான சுகம்

**'ஒரு தாய் தேற்றுவது போல தேற்றுவேன்' (ஏசா.66:13)**

"தனி நபரின் சுகமே நாட்டு சுகம்" தனித்தனி நபராக மனம் திரும்பினால் தேசம் மாறும். தனித்தனி நபரின் காயம் ஆறினால் தேசத்தின் காயம் ஆறும்.

பிசாசு காயம் உண்டாக்குகிறவன். தேவனோ காயம் ஆற்றுகிறவர். தன் ஆடுகளுக்காக ஜீவனையும் கொடுத்து காயம் கட்டுகிறவர். சாத்தான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளையை சிறுவயதில் இருந்தே கண் வைத்து காயப் படுத்துகிறான்.

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பின்பும் சில காயங்கள் ஆறாதவைகளாக தேவ மக்களுக்குள் உண்டு. கிறிஸ்துவுக்குள் வந்த பிறகும் தேவ மக்கள் சாத்தானால், உறவினரால், வெளி மக்களால், தேவ பிள்ளைகள், ஊழியர் மூலம் காயப்படுகிறார்கள். காயப்பட்டவர்கள் ஓட முடியாது. 'God can't use a wounded soldier" தங்கள் காயத்தின் வலியிருக்கிறவர்கள் பிறரின் காயத்தை ஆற்ற எழும்ப முடியாது

பிறர் காயங்களை ஆற்ற அழைக்கப்பட்ட நாம் நம் காயங்களின் வேதனையிலேயே நாட்களை கழிக்க முடியாது. நாம் நம்மைத் தாழ்த்தினால், தேவ முகத்தைத் தேடினால் பொல்லாத வழிகளைவிட்டு விலகி, தேவனை நோக்கி ஜெபித்தால், நமது காயங்களை தேவன் ஆற்றுவது உண்மை.

"ஒரு தாய் தேற்றுவது போல தேற்றுவேன்" என்கிற வேத வாக்கை தேவன் நாங்கள் நடத்துகிற 10 நாட்கள் பள்ளியில் நிரூபிக்கிறார். பல காயங்களுடன் வந்தவர்கள் தேவன் அவர்களின் காயங்களை கட்டும்போது கதறிக் கதறி அழுவார்கள். அப்படி

தன் மனைவி இறந்தவுடன் அழாமல் தன் வேதனையை உள்ளேயே அடக்கி வைத்திருந்த சகோதரர் ஒருவர் எங்கள் 10 நாட்கள் பயிற்சிக்கு வந்திருந்தார். அவர் மனைவி இறந்த போது அழவே இல்லையாம். துக்கம் உள்ளேயே இருந்து இருக்கிறது. எங்கள் பயிற்சிப்பள்ளியில் ஜெப வேளையில் உள்ளங்களை ஆற்றுகிற ஆவியானவர் எழும்பினார். இயேசுவாகிய நல்ல சமாரியன் குற்றுயிராக இருப்பவர்களின் காயங்களில் எண்ணெய் வார்க்கிற அவர் திராட்சரசம் வார்க்கிறார். அவர் காயம் ஆற்றுகிறார். ஆம், நல்ல சமாரியன் இயேசுவும், பரிசுத்த ஆவியானவரும் தேற்றினார்கள். காயங்களை ஆற்றினார்கள். இந்த சகோதரன் கதறி கதறி அழுதார். அவர் காயம் ஆறியது. இன்று அவர் தேவனுக்காக வல்லமையாய் பயன்படுகிறார்.

ஆம், நம் காயம் ஆறினவுடன் தேசத்தின் காயம் ஆற்ற புறப்படவேண்டும். (லூக்.22:32) தேசத்தின் காயங்களை ஆற்றப்போகும்போது, எதிர்ப்புகள் வரலாம். கிறிஸ்தவ விரோதிகளால் சரீரத்திலும் உள்ளத்திலும் காயங்கள் வரலாம்.

பவுலும், சீலாவும் காயப்பட்டார்கள், சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்கள் தேவனைத் துதித்தார்கள். காயப்படுத்தினவர்களே காயம் கட்டும் சூழ்நிலை எப்படி வந்தது? பவுலும், சீலாவும் காயங்களின் வேதனை நடுவில் வெளிச்சம் இல்லாத இருட்டு வேளையில் தூக்கமின்றி துதித்துப் பாடினார்கள். சிறைக்கதவு திறந்தது. சங்கிலிகள் உடைந்தன. கைதிகள் விடுதலையானார்கள். பட்டணமே மாறியது. அதுபோல தேவனே காயங்களை ஆற்றுவார். உற்சாகமாய் ஊழியத்தில் முன்னேறுங்கள். ஆரோக்கியம் உங்கள் வாழ்வை மூடும். தேசம் நேசருக்கு சொந்தமாகும்.

**அத்தியாயம் 25**

# தேசத்தின் சுகம்

**அவர்கள் தேசத்திற்கு ஷேமத்தைக் கொடுப்பேன்.** (2 நாளா. 7:14)

நமது தேசமே இன்று சத்துருவால் காயப்பட்டு குற்றுயிராக இருக்கிறது. சாத்தான் பாவத்தாலும், வறுமையாலும், அநீதியாலும், தீவிரவாத கிரியைகளாலும், விக்ரக ஆராதனையாலும், நம்பிக்கையின்மையாலும், தேசத்தைக் காயப்படுத்தி குற்றுயிராக விட்டிருக்கிறான். தேசத்தின் முன்னேற்றத்திற்கான அறிகுறிகள் மறைய ஆரம்பித்திருக்கிறது. ஸ்திரமான அரசாங்கம் இல்லை. அரசியலில் குழப்பம் நீடிக்கிறது. ஜனங்கள் அரசியல் தலைவர்கள் மேல் இருந்த நம்பிக்கையை இழந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் ஆவியானவர் மகிமையாக இறங்கி தேசத்தின் காயத்தை ஆற்ற வேண்டும். தேசத்தின் சுகம் மன்றாட்டு ஜெபத்தில் இருக்கிறது. விசுவாசத்தோடும், ஆவியோடும், கருத் தோடும் ஆராதிக்கும் போது ஜெபிக்கிற வல்லமை வெளிப்படும்.

அவர் நாமம் தரித்த ஜனங்களான தேவ மக்களும், தேவ ஊழியரும் மக்களும் தங்கள் பெருமையை விட்டு இறங்க வேண்டும். தங்கள் சுயத்தை பலியிட்டு இருதய ஆராய்ச்சி செய்ய வேண்டும். பொல்லாத வழிகளான சோம்பல், இச்சை, பிரிவினைகள், உலக ஆசாபாசம், பேர், பெருமை, பண ஆசை, பொருளாசை ஆகியவற்றினின்று திரும்ப வேண்டும்.

அவர் முகத்தைத் தேட வேண்டும். அவரோடு பல மணி நேரங்கள் இருக்க வேண்டும். அவரைப் போல மாறி, மகிமை மேல் மகிமை அடைந்து அவர் பார்ப்பது போல தேசத்தைப் பார்த்து மன்றாட வேண்டும். ஒருமனமாய் ஒற்றுமையாய் எழும்ப வேண்டும். தேசம் ஷேமம் அடையும். தேசத்தின் எழுப்புதலே (சுகமே) நமது பேச்சும், மூச்சும் எல்லாமுமாக இருக்க வேண்டும். அப்பொழுது தேசம் சுகமடைவது நிச்சயம்.

# எங்களோடு தொடர்பு கொள்ள வேண்டுமா?



இந்தப்புத்தகம் தேவ சித்தம் இல்லாமல் இன்று உங்கள் கைகளில் தவழவில்லை. தொடர்ந்து நாம் கடைசி கால எழுப்புதல் பணியை நிறைவேற்ற உங்கள் ஒத்துழைப்பும், ஜெபமும் மிகவும் தேவை. தேவன் அனுப்பப் போகும் மாபெரும் எழுப்புதலில் பங்கு வகிக்க இன்றே எங்களை அணுகவும்.

எமது மாதாந்திர பத்திரிகை பெராக்கா தீர்க்கதரிசன தொனியும், இப்புத்தக ஆசிரியர் எழுதியிருக்கும் பிற புத்தகங்கள், வெளியிட்டு இருக்கிற ஒளி, ஒலி நாடாக்கள் குறித்த இலவச தகவலுக்காகவும் (CATALOGUE), இவ்வூழியங்களைக் குறித்து அறியவும் எங்களுக்கு எழுதுங்கள்.


**எமது முகவரி:**

**பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்,**

**1408, செக்டர் 1, கோல்டன் காலனி,**

**முகப்பேர், சென்னை – 600 050**

✆ Off : 044 - 6255800

Res : 044 - 652450

# அனுதின ஆரோக்கியம்

- ***தெய்வீக சுகத்தை அனுதினமும் உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டுமா?***
- ***தெய்வீக சுகத்தை குறித்த சத்தியத்தை சகல கோணங்களிலும் அறிய வேண்டுமா?***
- ***ஆழ்ந்து படியுங்கள்! அப்பியாசியுங்கள்!! அனுபவமாக்குங்கள்!!!***

# ஆசிரியரைக்குறித்து...

இப்புத்தக ஆசிரியர் ஜேசுதாஸ் சாமுவேல் தனது பதினாறாம் வயதிலிருந்தே கர்த்தரோடு கறைபடாமல் நடந்த தேவதாசன். இருபதாம் வயதிலிருந்து முழு நேர ஊழியத்தில் ஈடுபட்டு சித்தேரி மலையிலும், வட இந்தியாவின் பல பகுதிகளிலும் கர்த்தருக்காக தியாக சேவை புரிந்தவர். என்னோடு இருபது ஆண்டுகளாக நிழலெனத் தொடர்ந்து பவுலுக்கு ஒரு தீமோத்தேயு போல, எலியாவுக்கு எலிசா போல உழைத்து அபிஷேகத்தை வளர்த்துக் கொண்டவர். இவர் ஒரு ஜெப மனிதர். ஆயிரங்களை ஆவியின் நிறைவுக்குள் நடத்தும் கிருபை பெற்றவர். வல்லமை வரங்கள் இவர் மூலம் செயல்பட்டு மக்கள் குணமடைகின்றனர். தேவனுக்காக எழுதும் கிருபை இவர் மேல் அன்றாடம் பெருகி வருகிறது. இவர் எழுதிய ஜெப மேகங்களுக்குள்ளே, அனுதின வாழ்வில் தூதர் பணி, அனுதின துதி பலி, அனுதின விசுவாச அறிக்கை ஆகிய புத்தகங்கள் பலரை ஆசீர்வதித்த சாட்சிகள் ஏராளம் வந்து கொண்டிருக்கின்றன. இந்தப்புத்தகம் மூலம் நீங்கள் பெறப்போகும் ஆரோக்கிய வாழ்வு அபரிமிதமாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

**சகோ.வ.எசேக்கியா பிரான்சிஸ்**
ஸ்தாபகர்
பெராக்கா தீர்க்கதரிசன ஊழியங்கள்